RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
"Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 20 ஒக்டோபர் 2023 இதழ்:- 23

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## புலம்பெயர்ந்த தேசங்களில் எம் வாழ்வு வளம் பெறவும் வசதிகள் பெறவும் உயிர்க்கொடை கொடுத்தவர்களின் பிள்ளைகளுக்கான "ஊட்டும் கரங்கள்" நிகழ்வில் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை கலந்து கொள்ளுங்கள்





புலம் பெயர்ந்த தேசங்களில் எங்கள் வாழ்வு வளம் பெறவும் வசதிகள் பெறவும் சொந்த மண்ணில் உயிர்க் கொடை கொடுத்தவர்களின் பிள்ளைகளுக்கான உயிர் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை 6.00 மணிக்கு நடைபெறும். ஊட்டும் கரங்கள் நிகழ்வில் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம். பொருளாதார நெருக்கடி, மழை கால ஆரம்பம், பிள்ளைகளின் கம்பளிப் போர்வை என பல்வேறு செலவுகள் அதிகரித்துள்ள இவ்வேளை கடந்த 11ஆண்டுகளாக இவர் களுக்கான உணவுத் தேவையையும் கல்வித்தேவையும் நிறைவு செய்து வரும் கனடியத் தமிழ்ச் சொந்த ங்கள் விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம். விபரங்கள் 5ம்.12ம், 13ம் பக்கம் பார்க்க) தொடர்புகளுக்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## வடக்கு கிழக்கில் புத்தர் சிலை வைப்பு கடுமையாகச் சாடும் அலன்கீனன்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டு வரும் இன, மத, கலாசார மறு உருவாக்க நடவடிக்கைகள் சுமுகமாக முடிவடை யாது என்பதையே இலங்கை மற்றும் உலக வரலாறு உணர்த்துவதாக நெருக்கடி (3ம் பக்கம் பார்க்க)



## ஹர்த்தால் விளையாட்டில் சோடை போன கட்சிகள்

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

**www.AgentSiva.com**

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah
Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

**Team SIVA**

WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
B.Comm. Sales Representative

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



20 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**

Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200

11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7


NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N & Conlin Rd



**Oshawa** **$279,000**

Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

### Burnhamthorpe & Confederation



**Mississauga** **$619,990**

Bedrooms: 1+1 Washrooms: 1
Indoor pool, gym, party/games rool

### Warden Ave / Enterprise Blvd



**Markham** **$749,000**

Bedrooms: 1+1 Washrooms: 2
Direct Access to Hwy 7 & 407

### Dundas/Hurontario St


**Mississauga** **$599,000**

Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Mississauga Rd & Eglinton Ave


**Mississauga** **$1,193,000**

Bedrooms: 3 Washrooms: 4
Closer to 403, 401, 407

### Lawrence & Morningside


**Scarborough** **$629,900**

Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

### Green Rd & Brookhill Blvd



**Clarington** **$999,990**

Bedrooms: 3 Washrooms: 3
Spent $100,000 on Recently Reno.

### Markham Rd & Denison


**Markham** **$629,900**

Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.

### Simcoe St / Buckingham Ave


**Oshawa** **$1,349,998**

Bedrooms: 5 Washrooms: 4
Victorian Style home in Oshawa

### Main St & Danforth Ave


**Toronto** **$1,400,000**

Bedrooms: 3+1 Washrooms: 3
Newly Renovated Spacious Home

### Woodbine Ave & Mt Albert Rd


**East Gwillimbury** **$1,500,000**

Bedrooms: 3 Washrooms: 2
Approx. 90 Ft Of Frontage

### 9th Line/14th Ave


**Markham** **$1,759,000**

Bedrooms: 4+1 Washrooms: 4
Newly renovated luxury home

### Meadowvale / 401


**Scarborough** **$1,999,786**

Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Fletcherscreek Blvd/Bovaird Dr


**Brampton** **$3,500**

Bedrooms: 3 Washrooms: 4
Lots Of Upgrades!

### Brock Rd/William Jackson Dr



**Pickering** **$2,750**

Bedrooms: 2 Washrooms: 3
Open concept main level

### Lawrence/Scar. Golf Club



**Scarborough** **$3,500**

Bedrooms: 3+1 Washrooms: 2
Great neighbourhood

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# வடக்கு கிழக்கு புத்தர் சிலை வைப்பு கடுமையாகச் சாடும் அலன்கீனன்



வடக்கு கிழக்கு மாகாணங்களில் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டு வரும் இன, மத, கலாசார மறு உருவாக்க நடவடிக்கைகள் சுமுகமாக முடிவடையாது என்பதையே இலங்கை மற்றும் உலக வரலாறு உணர்த்துவதாக நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் நிலங்கள் பெரும்பான்மையின சிங்களவர்களின் குடியேற்றங்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறும் வலியுறுத்தி கடந்த சில மாதங்களாக அப்பகுதியில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க தலைமையில் இவ்விவகாரம் ஆராயப்பட்டதையடுத்து, பண்ணையாளர்களுக்கு உடனடியாகத் தீர்வை வழங்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இருப்பினும் அதே தினத்தில் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தலைமையில், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் பங்கேற்புடன மயிலத்தமடு, மாதவனை பகுதியில் புதிய புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டது.

இச்சம்பவத்தை விபரிக்கும் 'எக்ஸ்' தளப்பதிவொன்றை (டுவிட்டர் பதிவு) மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் செய்திருக்கும் பதிவிலேயே நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

வட, கிழக்கு மாகாணங்களில் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டு வரும் இன, மத, கலாசார மறு உருவாக்கத்தை முன்னிறுத்திய இவ்வாறான நடவடிக்கைகள் சுமுகமாக முடிவடையாது என்பதையே இலங்கையினதும், ஏனைய உலகநாடுகளினதும் வரலாறு உணர்த்துகின்றது' என்று அப்பதிவில் சுட்டிக் காட்டியுள்ள அவர், 'தீயணைப்பாளர்கள் எவரும் இல்லாத மிகவும் வறண்ட பகுதியில் ஏராளமான தீக்குச்சிகள் எரிகின்றன' என்று குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணம் முதல் அம்பாறை வரை புத்தர் சிலைகள்! எப்படிக் கலையும் தமிழீழக் கனவு? கோவிந்தன் எம்.பி. கேள்வி

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா ஜகம்பத், அம்பிட்டிய சுமணரத்ன தேரர் இருவரும் மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரவையில் புத்தர் சிலை ஒன்றை அங்குள்ள சிங்களவர்களின் உதவியுடன் வைத்து அங்குரார்ப்பண நிகழ்வை செய்துள்ளார்கள்.

இவ்வாறாக நீங்கள் நடந்து கொள்ளும் போது தமிழீழக்கனவு எப்படி தமிழ் மக்கள் மத்தியிலிருந்து இல்லாமல் செல்லும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான கோவிந்தன் கருணாகரம் கேள்வி எழுப்பினார்.

மேய்ச்சல் தரைகளில் அத்துமீறி குடியிருப்போரை நீதிமன்ற அனுமதியை பெற்று உடனடியாக வெளியேற்றுமாறு காவல்துறைக்கும் மகாவலி அதிகார சபைக்கும் உத்தரவிட்ட நிலையிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 17 ஒக்டோபர் 2023 செவ்வாய்க் கிழமை இடம் பெற்ற கோப் குழுவின் 100 ஆவது ஆண்டு நிறைவு சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், தமிழீழ விடுதலைப் புலிகளை நாங்கள் அழித்துவிட்டோம்.ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து தமிழீழக்கனவு இன்னும் மறையாமல் இருப்பதாக முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அதிபர் ஊடக மையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருந்தார்.

நான் ஒரு விடுதலைப்போராளி என்ற வகையில் ஓர் உண்மையைக் கூறுகின்றேன். எமது மக்களின் மனநிலையைக் கூறுகின்றேன் .உண்மையில் தமிழீழக்கனவு ,தனிநாட்டுக்கனவு என்பது இன்னும் எமது மக்கள் மத்தியிலிருந்து இல்லாமல் செல்வதற்கு அல்லது அழிவதற்கு நீங்கள் விரும்பவில்லை என்பதே உண்மை.

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை வரை தையிட்டி விகாரையாக இருக்கலாம் ,குருந்தூர் மலை விகாரையாக இருக்கலாம் ,வெட்டுக்குநாறி மலையாக இருக்கலாம், திருகோணமலையில் அமைக்கப்படும் விகாரைகளாக இருக்கலாம், அம்பாறையில் கபளீகரம் செய்யப்படும் தமிழர் நிலங்களாக இருக்கலாம் . இவை எல்லாம் தமிழீழக்கனவை ,தனிநாட்டுக்கனவை எமது மக்கள் மத்தியிலிருந்து இல்லாமல் செல்வதற்கு அல்லது அழிவதற்கு நீங்கள் விரும்பவில்லை என்பதையே வெளிக்காட்டி நிற்கின்றன என தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை அழிக்குமாறு முறைப்பாடு!

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தூபி உரிய அனுமதிகள் பெறப்படாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகளை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் யாழ்ப்பாணம் கட்டுடை மற்றும் கிளிநொச்சி விசுவமடு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த இரு பொதுமகன்கள் ஆகியோர் இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை ஆரம்பித்துள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தூபியை (22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
**416 755 5544**


# காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகையை தொழில் நுட்பப் பல்கலைக்கழகமாக மாற்ற 50 வருட குத்தகைக்கு எடுத்த கனடியத் தமிழர் இந்திரன் பத்மநாதன்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி மாளிகையானது தகவல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (SLIIT) சுமார் 50 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது.

இதன் முதலீட்டு மதிப்பு அண்ணளவாக 5000 பில்லியன் ரூபாய்கள். கனேடிய முதலீட்டாளருடன் இணைந்து இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இதனை தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக அபிவிருத்தி செய்யவுள்ளது.

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு 16 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை பத்தரமுல்ல நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தலைமையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக, ஜனாதிபதி அலுவலகத்தின் தேசிய பாதுகாப்பு பிரதம ஆலோசகரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், ஜனாதிபதி மாளிகையை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (SLIIT) குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் அமைந்துள்ள இந்த ஜனாதிபதி



மாளிகையின் நிர்மாணப் பணிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது 2010–2015 ஐந்தாண்டுகளுக்குள் இருந்தது. இந்த ஜனாதிபதி மாளிகையை நிர்மாணிக்கும் போது புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து கடும் எதிர்ப்புகள் எழுந்தன. இங்கு கடந்த காலத்தில் கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டது.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள இந்த மாளிகை வளாகம் 30 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டுள்ளது, அதில் 12 ஏக்கரில் இந்தக் கட்டிடத் தொகுதிகள் அமைந்துள்ளன.

எஞ்சிய நிலம் அப்பகுதி மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்டதுடன், அரசுக்கு சொந்தமான 12 ஏக்கரை SLIIT நிறுவனத்திற்கு குத்தகைக்கு விட முதலில் முடிவு செய்யப்பட்டது. மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட எஞ்சிய 17 ஏக்கர் காணியை வருமானத்தின் அடிப்படையில் SLIIT நிறுவனத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) இந்த ஜனாதிபதி மாளிகையின் பணிகளை விரைவாக முடித்து முழு அளவிலான தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக மாற்றும் என நம்புகிறது. இந்த தகவல் தொழில்நுட்பம் பல்கலைக்கழகம் northern Uni. IT பல்கலைக்கழகமாக உருவாக்கப்படும்.

ஆண்டுதோறும் சுமார் 1500 மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்கும் திறன் கொண்டது. மேலும், இந்த தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் கட்டப்பட்டதன் பின்னர், வடக்கிலிருந்து வரும் பிள்ளைகளுக்கு தகவல் தொழில்நுட்பம் படிக்க கொழும்புக்கு வர வேண்டிய அவசியமில்லை.

இதன்படி முப்பது வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடமாகாண பிள்ளைகளின் தகவல் தொழில்நுட்ப அறிவு விருத்தியடைந்து அவர்கள் தமது அறிவை பூரணப்படுத்த முடியுமாதலால் அவர்கள் எதிர்கால நவீன உலகிற்கு பொருந்துவார்கள் என இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்த தகவல் தொழில்நுட்ப பல்கலைக் கழகம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அண்டை நாடான இந்தியாவைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு கல்வி கற்க வாய்ப்பு அளிக்கப்படும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, தலைவர் இந்திரன் பத்மநாதன் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் எல். ரத்நாயக்க மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!
எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# மசோதா 104ஐ பாதுகாக்க நிதிப் பங்களிப்பை வழங்குவோம்!

மசோதா 104ஐ பாதுகாப்போம்: தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 2021 மீதான மேல் முறையீட்டு விசாரணை டிசம்பர் 4, 2023இல் ஒன்ராறியோ மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற உள்ளது

ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தால் ஜீன் 28, 2022இல் மசோதா 104ஐ உறுதிப்படுத்தி வழங்கிய தீர்ப்பை எதிர்த்து தமிழின அழிப்பு மறுப்பாளர்கள் செய்திருந்த மேல் முறையீட்டுக்கான விசாரணை எதிர்வரும் டிசம்பர் 4, 2023 இல் ஒன்ராறியோ மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற உள்ளது.

மசோதா 104: தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 2021, மூன்றாம் வாசிப்பை அடுத்து, அனைத்துக் கட்சிகளின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு ஆதரவுடன், ஏக மனதாக நிறைவேற்றப்பட்டு, மே 12, 2022இல் ஒன்ராறியோ மாகாணத்தின் சட்டமாக ஆக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டிலும் மே 18ஆம் நாளன்று முடிவடையும் ஏழு நாட்களும் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம் என இச்சட்டம் பிரகடனப் படுத்துகின்றது. இந்த வாரத்தில் ஒன்ராறியோ வாழ் மக்கள் தமிழின அழிப்பு பற்றியும், உலக வரலாற்றில் நிகழ்ந்தேறியுள்ள மற்றைய இன அழிப்புக்கள் பற்றியும் கற்பதோடு அவை பற்றிய விழிப்புணர்வையும் ஊக்குவிப்பர்.

மசோதா 104 நிறைவேற்றப்பட்டமை உலகெங்கணும் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஒரு அரசாங்கம் தமிழின அழிப்பு பற்றிய அறிவூட்டலை மேற்கொள்வதற்காக மசோதா ஒன்றை உருவாக்கியது இதுவே முதல் தடவையும் ஆகும்

இச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் சிறிது காலத்தின் பின்னர் தமிழின அழிப்பு மறுப்பாளர்கள், மசோதா 104க்கு எதிராகச் அரசியலமைப்புச் சவால் ஒன்றைத் தொடுத்தனர். மசோதா 104ஐப் பாதுகாக்கவும், தமிழின அழிப்பை மறுப்பவர்களை எதிர்த்து நடவடிக்கை எடுக்கவும் 60க்கும் மேற்பட்ட அமைப்புக்களின் ஆதரவுடன் கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT), கனடியத் தமிழ் இளையோர் ஒன்றியம் (CTYA) மற்றும் கனடாத் தமிழ்க் கல்லூரி (CTA) கூட்டாக இடையீட்டாளர்களாகத் தமதுபக்க நியாயத்தை நீதி மன்றத்தில் சமர்ப்பிக்க முன்வந்து செயல்பட்டனர். மசோதா 104இன் முக்கியத்துவத்தைச் சட்டரீதியில் இடையிட்டு வாதிடுவதற்கு Goldblatt Partners எனும் சட்ட நிறுவனத்தை தமிழ் கனேடிய சமூகம் அமர்த்தியது. இவ் வழக்கின் இறுதியில் மசோதா 104: தமிழின அழிப்பு கல்விவாரச் சட்டம் 2021, ஜீன் 28, 2022இல் ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டு தமிழின அழிப்பு மறுப்பாளர்கள், மசோதா 104க்கு எதிராகச் தொடுத்த அரசியலமைப்புச் சவால் நிராகரிக்கப்பட்டது.

எனினும், ஜீன் 28, 2022இல் ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மசோதா 104 பற்றிய நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தமிழின அழிப்பு மறுப்பாளர்கள் ஒன்ராறியோ மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மீண்டும் மேல்முறையீடு செய்துள்ளனர். மசோதா 104இன் முக்கியத்துவத்தைச் சட்டரீதியில் இடையிட்டு வாதிடுவதற்கு Goldblatt Partners எனும் சட்ட நிறுவனத்தை கனடியத் தமிழர் தேசிய அவை கனடியத் தமிழ் இளையோர் ஒன்றியம் மற்றும் கனடாத் தமிழ்க் கல்லூரி கூட்டாக, தமிழ் மக்கள் சார்பில், மீண்டும் அமர்த்தியுள்ளது.

இன அழிப்பு புரிவோர் அதனை எப்போதும் மறுப்பார்கள் என்பதனை வரலாறு எமக்கு மீண்டும் மீண்டும் புகட்டி வருகின்றது. தமிழின அழிப்பு மறுப்பாளர்கள், மசோதா 104ஐக் குறிவைத்து அதை இல்லாமல் செய்ய மீண்டும் மீண்டும் வேண்டுமென்றே முயற்சிப்பது, அவர்கள் தமிழின அழிப்பால் பாதிக்கப்பட்டவர்களை மௌனமாக்குவதற்கு முனைப்போடு செயற்படுகின்றார்கள் என்பதனைக் எடுத்துக் காட்டுகின்றது.

இன அழிப்பில் இருக்கும் 10படிநிலைகளில் அதனை மறுத்தலே கடைசி படிநிலையாகும். இந்த படி நிலையானது பொதுவாக இனஅழிப்பு நடந்து கொண்டிருக்கும் போதும், அது நடந்து முடிந்த பின்பும் தொடர்வதை அவதானிக்கலாம். அத்தோடு எதிர்காலத்தில் கூட மீண்டும் ஒருமுறை இந்த குறிப்பிட்ட மக்களுக்கு எதிரான ஒரு இன அழிப்பு நடைபெறலாம் என்பதை எடுத்துக் காட்ட வல்ல சிறந்த குறிகாட்டியாகவும் இந்த படிமுறை உள்ளது.

தமிழின அழிப்பு பற்றிய அறிவுட்டலை மேற்கொள்வதற்காக முதல் முதலாக உருவாக்கப்பட்டுள்ள இந்த மசோதாவை பாதுகாப்பதற்கு எல்லோரும் ஒன்றுபடுவோம். இந்த மசோதா 104ஐ பாதுகாக்க இடையீட்டாளர்களாக வாதாட நாம் எடுத்துள்ள முயற்சிக்கு வேண்டிய வழக்கு செலவுக்கு பல்வேறு வேலைத் திட்டங்கள் ஊடாகவும் பல்வேறு தளங்கள் ஊடாகவும் இதுவரை நிதி உதவி வழங்கியுள்ள தனி நபர்களுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் அமைப்புகளுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்ற அதேவேளை தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த வழக்கு செலவுக்கு உங்களது தொடர்ச்சியான நிதிப் பங்களிப்பை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். பின்வரும் வழிகளில் உங்களது பங்களிப்பை செய்யலாம்:

FundMe: https://www.gofundme.com/f/defend-bill-104

E-transfer: Bill104@ncctcanada.ca

Cheque: payable to “National Council of Canadian Tamils”

எல்லோரும் ஒன்றுபட்டு நின்று தமிழின அழிப்பு மறுத்தலையும் திரிபுபடுத்தலையும் எதிர்ப்போம்! உங்கள் ஆதரவுக்கு நன்றி!

கனடியத் தமிழர் தேசிய அவை- கனடியத் தமிழ் இளையோர் அமைப்பு- கனடாத் தமிழ்க் கல்லூரி

# மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையில் புத்தர்!






மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரதேசத்தில் கடந்த 15 ஒக்டோபர் 203 ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தலைமையில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராத யஹம்பத்தின் பங்களிப்புடன் புதிய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. மாதவனை மயிலத்தமடு பிரதேசம் பாரம்பரியமாக தமிழ் பால் பண்ணையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அப்பகுதியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள சிங்கள குடியேற்றவாசிகளுக்கு ஆதரவாக புதிய புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அதேவேளை தமிழர் பகுதிகளில் தொடர்ந்து காணி அபகரிப்பிலும், குடிசார் பரம்பலை மாற்றியக்கவும், பௌத்த மயமாக்கலை தொடர்ச்சியாகவுமே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டம் திபுல பெத்தான எனும் இடத்தில் அம்பிட்டிய சுமனரத்ன தேரரின் தலைமையில் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

கால்நடை பண்ணையாளர்களுக்கும் சட்டவிரத குடியேற்ற வாசிகளுக்கும் சிறந்ததொரு தீர்வினை வழங்குவதாக ஜனாதிபதி கூறியிருந்த நிலையில் அதற்கு எதிர் மாறாக சிங்கள பேரினவாதத்தின் அத்துமீறிய அராஜகம் அரங்கேறியுள்ளது.

இந்த அத்துமீறிய நடவடிக்கை தொடர்பாக சர்ச்சைக்குரிய (7ம் பக்கம் பார்க்க)

# இவர்களுக்காக.... 28 ஒக்டோபர் 2023





என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே!

திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 13 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 12 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 436 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களது இடர்களைக் களையவும் கல்வியை மேம்படுத்தவும் எதிர்வரும் 28 ஒக் 2023 சனிக்கிழமை நடைபெறவுள்ள ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன் (விபரங்கள் 12ம் 13ம் பக்கம் பார்க்க)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள்.

நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். நாம் வாழும் கனடிய மண்ணிலும் அனைத்துமே விலை யேற்றம் கண்டுள்ளமையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விழாவில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்களால் முடிந்தளவு பங்களிப்பை எம்முடன் தொடர்பு கொண்டு வழங்குமாறும் உங்கள் பெயர், விபரங்கள் ஈழநாடு பத்திரிகையிலும் முகநூலிலும் தவறாது வெளிவரும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

எம் தேசத்தின் எதிர்காலச் சந்ததி எம் மண்ணில் நிம்மதியாக சிறப்பாக வாழ வழி சமைப்போம்! வாரீர்!

**விழா நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத நிலையில் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இரண்டு கருணையுள்ளங்களான வாகீசன் குடும்பம், தயாபரன் குடும்பம் இணைந்து 100.00 டொலர்களும்**

**திருமதி சரோஜினிதேவி கணேசலிங்கம் 100.00 டொலர்களும் வழங்கியுள்ளனர். (தொடரும்)**

**தொடர்புகளுக்கு**
**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

# கனடியப் பிரதமரின் "இனப்படுகொலை" குற்றச்சாட்டை உரிய விசாரணைகள் மூலமே தவறென நிரூபிக்க முடியுமேயன்றி ஆதாரங்களற்ற குற்றச்சாட்டுக்கள் என்று கூற முடியாது



கனேடியப் பிரதமரின் 'இனப்படுகொலை' குற்றச்சாட்டு மற்றும் அதனுடன் தொடர்புடைய சர்ச்சைகளைப் பொறுத்த மட்டில், அவை எவ்வித ஆதாரங்களுமற்ற குற்றச்சாட்டுக்கள் என்று கூறுவதன் ஊடாக மாத்திரம் அதனைத் தடுக்க முடியாது. மாறாக அவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை மேற்கொள்வதன் மூலமே அதனைத் தவறான குற்றச்சாட்டென நிரூபிக்க முடியும் என்று சவுதி அரேபியாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும், தேசிய சமாதானப்பேரவையின் பணிப்பாளருமான ஜாவித் யூசுஃப் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்காசிய சிந்தனைக் குழாம்களின் ஒன்றியத்துடன் இணைந்து தேசிய சமாதானப்பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சர்வதேச தொடர்புகளில் போலிச்செய்தி, தவறான தகவல் மற்றும் பரப்புரை' எனும் புத்தக வெளியீட்டு நிகழ்வு கடந்த 13 ஒகடோபர் 2023 வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ரேணுகா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் குழு ரீதியான கலந்துரையாடலில் கருத்து வெளியிடுகையிலேயே ஜாவித் யூசுஃப் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார். தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் சொந்தக்கருத்துக்கள் மற்றும் தனியுரிமை என்பன பாதுகாக்கப்பட வேண்டும். இருப்பினும் அரசியல் உள்ளிட்ட பொதுவாழ்வில் ஈடுபடுவோர் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே போன்று தற்போது முக்கிய பேசுபொருளாக மாறியிருக்கும் நிகழ்நிலைக்காப்பு சட்ட மூலம் தொடர்பில் கருத்துரைத்த அவர் அச்சட்டத்தின் ஊடாக தவறான மற்றும் போலியான தகவல்கள் மாத்திரம் முடக்கப்படக் கூடிய வகையிலும், அவற்றுடன் தொடர்புபட்டவர்கள் மாத்திரம் தண்டிக்கப்படக் கூடியவாறும் அது இறுக்கமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# காசாவில் இடம்பெறும் சம்பவங்கள் இலங்கையின் இறுதிப் போரின் ஆரம்ப தருணங்களை நினைவுபடுத்துகின்றன - மார்க் சோல்டர்



காசாவில் தற்போது இடம் பெறும் சம்பவங்கள் இலங்கையின் இறுதிபோரின் ஆரம்ப தருணங்களை நினைவுபடுத்துகின்றன என பத்திரிகையாளரும் ஆய்வாளரும் எழுத்தாளருமான மார்க் சோல்டர் தெரிவித்துள்ளார். இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்பு குறித்த என்ற நூலை எழுதிய மார்க்சோல்டர் தனது டுவிட்டர் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

காசாவில் தற்போது இடம்பெறும் சம்பவங்கள் இலங்கையின் இறுதிபோரின் ஆரம்ப தருணங்களை நினைவுபடுத்துகின்றன. அக்காலப் பகுதியில் இலங்கையில் பொதுமக்கள் அரசாங்கம் அறிவித்த உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இதன் பிரதான விளைவு என்னவென்றால் தொடர்ச்சியான வான்வெளி ஆட்டிலறி தரைதாக்குதலால் பொதுமக்கள் உயிரிழப்புகள் பல மடங்காக அதிகரித்தன. விடுதலைப் புலிகளை பொதுமக்கள் மத்தியில் காணப்பட்ட ஆயுதங்களை இலக்குவைத்து இலங்கை இராணுவத்தினர் இந்த தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். எதிர்வரும் நாட்களில் காசாவில் இதுபோன்ற சூழ்நிலை ஏற்படாது என நம்புகின்றேன் பிரார்த்திக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தி இந்து' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் மாலினி பர்த்தசாரதி X தளத்தில் எழுதியுள்ளார்: 'இலங்கையில் தமிழர்களின் உரிமைகள் பிரச்னையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடூரத்தனம் மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அது போலவே, பாலத்தீன விவகாரத்திலும் (அல்லது அவர்களின் உரிமைகள் பிரச்னையிலும்) தீவிரவாதிகள் காரணமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஹமாஸின் கொடூரத்தனம் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.'

அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை உலகம் ஒரு போதும் மன்னிக்காது என்று அவர் எழுதுகிறார்.

இதுஇவ்வாறிருக்க ஜோர்தானிலிருந்து இஸ்ரேலிற்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்ற இரண்டு இலங்கை பெண்களை இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து இஸ்ரேலிய அதிகாரிகள் உடனடியாக அறிவித்துள்ளனர் என இஸ்ரேலிற்கான இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள பெண்கள் குறித்த விபரங்கள் இன்னமும் வெளியாகவில்லை அடுத்த கட்ட நடவடிக்கைக்காக இஸ்ரேலிய அதிகாரிகளிடமிருந்து மேலதிக தகவல்களை பெற உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எல்லைகள் ஊடாக இஸ்ரேலிற்குள் நுழைய விரும்புவர்களிற்கு தூதுவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# இந்தியா மீது தான் எமக்கு அதீத நம்பிக்கை:- பிரச்சனையில் தலையிடுவதை விரும்புகிறோம்

இந்தியாவின் மீது தான் இஸ்ரேலியர்கள் மிகவும் நம்பிக்கை வைத்துள்ளதாக இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நவோர் கிலன் தெரிவித்துள்ளார் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் நடத்தும் போர் தொடர்கிறது. இந்நிலையில், இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நவோர் கிலன் (Naor Gilon) இந்தியாவின் நிலைப்பாட்டை குறித்து கருத்து தெரிவித்தார்.

அதில் அவர் கூறியதாவது: 'இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனுக்கும் இடையே பல தசாப்தங்களாக நடைபெற்று வரும் சிக்கலை தீர்க்க இஸ்ரேல் தற்போது முயலவில்லை. இப்பொழுது புதியதாக எழுந்திருக்கும் தீவிர பிரச்சினையை தீர்க்க போராடுகிறோம். ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழித்தால் தான் மீண்டும் இது போன்ற தாக்குதல்கள் நடக்காது.

இந்தியா மீது இஸ்ரேல் நாட்டு மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேலில் மிகவும் விரும்பப்படும் தலைவர். பிற நாடுகளை விட இந்தியாவின் மீதுத ான் இஸ்ரேலியர்கள் மிகவும் நம்பிக்கை வைத்துள்ளனர்.

அக்டோபர் 7 அன்று நடைபெற்ற பயங்கர தாக்குதலுக்கு பிறகு பிரதமர் நரேந்திர மோடியும் இந்தியாவும் எங்கள் பக்கம் நின்றது. மோடி உடனடியாக கண்டனம் செய்தார். பிற நாட்டினர் உடனடியாக கண்டனம் தெரிவிக்கவில்லை. பிறகு தான் தெரிவித்தனர். அமெரிக்கர்கள் எங்களுக்கு துணை நிற்கின்றனர். மேலும் அமெரிக்கர்களுக்கு இந்தியாவுடன் தற்போது வலுவான உறவு உள்ளது. நாங்கள் இந்தியாவை நம்புவதால், அவர்கள் எங்கள் பிரச்சனையில் தலையிடுவதை நாங்கள் வரவேற்கிறோம்.



சுமார் 20 ஆயிரம் இந்தியர்கள் இஸ்ரேலில் வசிக்கின்றனர். அதில் சுமார் 1000 இந்தியர்கள் மட்டுமே இஸ்ரேலை விட்டு வெளியேற விரும்பினார்கள் அவர்களையும் நாங்கள் பத்திரமாக அனுப்பி வைத்தோம் என்றார்

# சுவிஸ் பொதுத் தேர்தலில் களமிறங்கும் ஈழத்தமிழர் வெற்றி பெற்றால் வரலாற்றுச் சாதனை!



சுவிஸ் நாடாளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழரான சந்தியாப்பிள்ளை கபிரியேல் போட்டியிடவுள்ளார். இவர் இலங்கை மன்னார் மாவட்டம் பறப்பாங் கண்டல் கிராமத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

நாளை மறுதினம் 22 ஆம் திகதி சுவீஸ் நாட்டில் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பாகப் இவர் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் சுவிஸ் நாட்டில் 1989 ஆம் அண்டு முதல் 25 வருடங்கள் மனநல வைத்தியசாலையிலும், 8 வருடங்கள் எலும்பு முறிவு வைத்தியசாலையிலும் ஆண் தாதியாக கடமை புரிந்துள்ளதாக கூறப்படுகிறது.


அரசாங்க அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளராக 1990 ஆம் அண்டு முதல் கடமை புரிந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும், இவர் சுவிஸ் நாட்டில் மன்னார் மறைமாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 7 கத்தோலிக்க ஆலயங்களில் 2019 ஆம் ஆண்டிலிருந்து திருப்பண்டப் பொறுப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

நகர சபை உறுப்பினராக 2016 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அவர் தொடர்ந்து இருந்து வருகின்றார். இவர் இத்தேர்தலில் வெற்றிப் பெற்றால் சுவிஸ் நாடாளுமன்றத்தில் இவர் முதல்தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என பதிவு செய்யப்படுவார் என தெரிவிக்கப்படுகின்றது.

# பயங்கரவாதமும் போரும் தீர்வுகளைக் கொண்டு வருவதில்லை

பாலஸ்தீன இஸ்ரேல் போரை நிறுத்த போப் வேண்டுகோள் விடுத்துள்ளார். வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் போப் பிரான்சிஸ் சதுக்கத்தில் சிறப்பு பிரார்த்தனைக்கு பிறகு பொது மக்கள் மத்தியில் பேசிய இஸ்ரேல்-ஹமாஸ் போர் குறித்து வேதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் பேசுகையில், இஸ்ரேலில் தற்போது நடப்பது அச்சமும், வேதனையும் அளிக்கிறது. பயங்கரவாதமும், போரும் தீர்வுகளை கொண்டு வருவதில்லை, மரணத்தை மட்டுமே கொண்டு வருகின்றன. போர் ஒரு தோல்வி. ஒவ்வொரு போரும் தோல்வி தான். எனவே போரை உடனடியாக நிறுத்தும்படி இருதரப்பையும் வேண்டுகிறேன் என்றார்.



# மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் ...

(5ம் பக்கத் தொடர்ச்சி) அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தனது முகநூல் பதிவு ஒன்றிலும் வெளிப்படுத்தியுள்ளார். இதன் மூலம்'பெகர விகாரை என அழைக்கப்படும் விகாரையினை நிர்மாணிப்பதற்கான ஆரம்பகட்ட முயற்சியே இதுவாகும் என தெரிவிக்கப்பட்டு ள்ளது.

2015ஆம் ஆண்டு அப்போது மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த சார்ல்ஸ் மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் மேற் கொண்ட அதிரடி நடவடிக்கை காரணமாக அகற்றப்பட்ட அத்துமீறிய சிங்கள குடியேற்றமும் விகாரையும் மீளவும் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாதவன மயிலத்தமடு பகுதியில் அத்துமறிய சிங்கள குடியேற்ற வாசிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ள நிலையில் பண்ணையாளர்களை அச்சுறுத்தும் வகையில் அவர்களது கால்நடைகளை சுட்டுக் கொண்டுள்ள கோரச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

# இந்திய இணைப்பின் முக்கியத்துவம்!

காங்கேசன்துறை நாகபட்டினம் கப்பல் சேவையை இந்திய பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக ஆரம்பித்து வைத்திருக்கின்றார். இந்தச் சேவை வர்த்தகத்தை மேம்படுத்துவதுடன், இரு நாடுகளுக்கிடையிலான நீண்டகால பிணைப்பை வலுப்படுத்துமென்று பிரதமர் மோடி தெரிவித்திருக்கின்றார். இதன் போது இந்தியாவின் தேசிய தமிழ் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரின் சிந்துநதி பாடலில் குறிப்பிடப்பட்டிருக்கும், இரு நாடுகளுக்கும் இடையிலான பாலத்தையும் மோடி நினைவுபடுத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு மேற்கொண்ட முதல் பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையில் பாலம் அமைக்கும் யோசனையை முன்வைத்திருந்தார். பாலம் அமைக்கும் விவகாரம் சற்று நெருக்கடியான விடயமாகவும் அடிப்படைவாதிகளால் நோக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு சூழலில் தான் நீண்டகாலமான இழுபறி நிலையில் இருந்து வந்தது குறித்த கப்பல் சேவை தற்போது ஆரம்பமாகியிருக்கின்றது.

இலங்கையில் பெரும் திட்டங்களை முன்னெடுக்கும் முயற்சியில் இந்தியா ஆர்வம் காண்பித்து வருகின்றது. ஏற்கனவே இதற்கான ஆரம்ப கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக திருகோணமலையை மையப்படுத்தி, முன்னெடுக்கத் தீர்மானித்துள்ள இரண்டு நாடுகளுக்கும் இடையிலான எண்ணெய் குழாய் பொருத்தும் திட்டம் பிரதானமானது.

இலங்கையின் பொருளாதார மீட்சியில் இந்தியாவின் திட்டங்கள் பெருமளவில் செல்லாக்கு செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியா பொருளாதார நிலையில் உலகின் ஐந்தாவது சக்தி. பிரித்தானியாவை பின்னுக்குத் தள்ளியிருக்கும் நாடு. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கணிப்பின்படி இன்னும் சில வருடங்களில், பொருளாதார நிலையில் மூன்றாம் நிலை சக்தியாக இந்தியா எழுச்சியுறும்.

இவ்வாறானதொரு நிலையில் இந்தியாவின் அயல் நாடுகள் அனைத்துமே பொருளாதார ரீதியில் நன்மைகளை பெறமுடியும். ஓர் உடனடி அயல் நாடென்னும் நிலையில், இலங்கைக்கு சாதகம் அதிகம் ஆனால், இலங்கையின் ஆட்சியாளர்கள் தொடர்பில் ஒரு பிரச்சனையுண்டு. இந்தியாவுக்கு வழங்கும் வாக்குறுதிகளுக்கு அமைவாக கொழும்பு நடந்து கொள்வதில்லையென்னும் குற்றச்சாட்டு அவ்வப்போது மேலெழுவதுண்டு.

கிழக்கு கொள்கலன் முனைய விவகாரத்தின் போது, முன்னைய ஆட்சியாளர்களுடன் இணக்கம் காணப்பட்ட உடன்பாட்டிலிருந்து, கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் விலகி சங்கடங்களை ஏற்படுத்தியிருந்தது.

இந்தியா – அதன் அயலுறவுக் கொள்கையின் கீழ் அயல் நாடுகளை நட்பு நாடுகளாகவே கருதுகின்றது. அந்த அடிப்படையிலேயே விடயங்களையும் கையாளுகின்றது. இலங்கை பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்த போது இந்தியாவே கைகொடுத்தது. நிபந்தனைகளின்றி 4 பில்லியன் டொலர்களை வழங்கியது இதனால் ஆபத்தான நிலையை அடைவதிலிருந்து இலங்கை தப்பியது.

அதேபோன்று ஈழத் தமிழ்மக்களின் பிரச்னையிலும் இந்தியா ஒன்றே தொடர்ந்தும் அரசியல் தீர்வை வலியுறுத்தி வரும் ஒரேயொரு நாடாகும். குறித்த கப்பல் சேவை தொடர்பில் எமது முன்னைய ஆசிரியர் தலையங்கத்திலும் ஒரு விடயத்தை சுட்டிககாட்டியிருந்தோம். அதாவது, இந்த கப்பல் சேவை வடக்கு மாகாணத்தின் பொருளாதார நலன்களிலும் பெரியளவில் செல்வாக்குச் செலுத்தும். இதனை சாதகமாக தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ளும். அனைத்தையும் கறுப்பு – வெள்ளையாக நோக்கும் தமிழ் பார்வையிலிருந்து விடுபட்டு, தென்னிந்திய – வடக்கு இணைப்பை, முற்றிலும் சாதகமாக பயன்படுத்திக் கொள்வது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்

## திகதி மாற்றம் பற்றிய முக்கிய அறிவித்தல்

29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றக்கிழமை நடை பெற இருந்த ஊட்டும் கரங்கள் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை 6.00 மணிக்கு அதே இடத்தில் நடைபெறும். பொருளாதார நெருக்கடி, மழை கால ஆரம்பம், பிள்ளைகளின் கம்பளிப் போர்வை என பல்வேறு செலவுகள் அதிகரித்துள்ள இவ்வேளை கடந்த 11 ஆண்டுகளாக இவர்களுக்கான உணவுத் தேவையையும் கல்வித் தேவையையும் நிறைவு செய்து வரும் கனடியத் தமிழ்ச் சொந்தங்கள் விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம். தொடர்புகளுக்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# இலங்கை தொடர்பான தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை! பிரிட்டனின் இந்து - பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்கான அமைச்சர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் அடுத்த ஆண்டுடன் முடிவுக்கு வரவுள்ள நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இணையனுசரணை நாடுகள் உள்ளிட்ட சகல தரப்புக்களுடனும் கலந்துரையாடித் தீர்மானிக்கப்படுமென பிரித்தானியாவின் இந்து - பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்கான அமைச்சர் ஆன்-மேரி ட்ரெவெல்யான் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை விவகாரத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என்றும், எனவே அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்து சமுத்திர கரையோர நாடுகள் அமைப்பின் 23 ஆவது அமைச்சர் மட்டக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நாட்டுக்கு வருகைதந்த பிரித்தானியாவின் இந்து - பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்கான அமைச்சர் ஆன்-மேரி ட்ரெவெல்யான் கடந்த இரு தினங்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அமைச்சர்களான அலி சப்ரி, விஜயதாஸ ராஜபக்ஷ, காஞ்சன விஜேசேகர, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, கொழும்பை தளமாகக் கொண்டியங்கி வரும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.



அதன் நீட்சியாக கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர், இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக்குடன் இணைந்து வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை சந்தித்து தொழில் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள், நல்லிணக்கம் மற்றும் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் விவகாரத்தில் அரசாங்கத்தின் உத்தரவாதம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் ஆன்-மேரி ட்ரெவெல்யானுக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று யாழ் ஜெட்விங் ஹோட்டலில் நடைபெற்றது. சுமார் ஒரு மணிநேரம் வரை நீடித்த இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் சார்பில் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரனும், புளொட் சார்பில் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனும் கலந்துகொண்டிருந்தனர். தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும், பிற காரணங்களால் அவர்கள் இச்சந்திப்பில் பங்கேற்கவில்லை.

அதன்படி இச்சந்திப்பில் பங்கேற்ற தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்தும், அண்மைய காலங்களில் வடகிழக்கு வாழ் தமிழ்மக்கள் முகங்கொடுத்து வரும் பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பிலும் பிரித்தானிய அமைச்சரிடம் விரிவாக எடுத்துரைத்தனர்.

குறிப்பாக அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா பதவி விலகி, நாட்டைவிட்டு வெளியேறியமை குறித்தும், அதற்கு குருந்தூர்மலை விவகாரத்தில் அவர் வழங்கிய தீர்ப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்ச்சைகள் பிரதான காரணமாக இருப்பதாகவும் தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் விளக்கிக் கூறினர். அதே போன்று, வட-கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் காணி அபகரிப்புக்கள் மற்றும் இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களை இடித்தும், புதிதாகவும் நிர்மாணிக்கப்பட்டு வரும் பௌத்த விகாரைகள் என்பன பற்றியும் இச்சந்திப்பின்போது விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இவ்விடயத்தில் வட-கிழக்கு மாகாணங்களில் முப்படையினர் மற்றும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் தனியார் காணி அபகரிப்புக்கள் பற்றிய பட்டியல் மற்றும் அவ்விரு மாகாணங்களிலும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 71 பௌத்த விகாரைகள் பற்றிய பட்டியல் ஆகிய இரு ஆவணங்களையும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பிரித்தானிய அமைச்சர் ஆன்-மேரி ட்ரெவெல்யானிடம் கையளித்தார்.

அதேபோன்று, அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தன்னிடம் கூறியதாகக் குறிப்பிட்ட ஆன்-மேரி ட்ரெவெல்யான், அவர் அதனைச் செய்வாரா என்று தமிழ்ப் பிரதிநிதிகளிடம் அபிப்பிராயம் கோரினார்.

அதற்குப் பதிலளித்த பிரதிநிதிகள், இவ்விடயத்தில் தமக்குப் பல்வேறு சந்தேகங்களும் மாறுபட்ட நிலைப்பாடுகளும் இருப்பதாகக் குறிப்பிட்டனர். 13 ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பில் பாராளுமன்றத்தில் அபிப்பிராயம் கோரப் போவதாக ஜனாதிபதி கூறியிருப்பதன் மூலம் இவ்விடயத்தில் அவரிடம் உண்மையான அரசியல் தன்முனைப்பு இல்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிவதாகவும், அரசியலமைப்பின் உள்ளடக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்திடம் அனுமதி கோரத் தேவையில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். மேலும், அடுத்த தேர்தல் வரை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த மாட்டார் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இலங்கையைக் காலனித்துவத்தின் கீழ் வைத்திருந்து, தமது ஆட்சிமுறையை இலங்கைக்கு வழங்கிச்சென்ற பிரித்தானியாவுக்கு இவ்விடயத்தில் தலையீட்டு, தீர்வு காண உதவ வேண்டிய தார்மீகக் கடப்பாடு உண்டு என்றும் அமைச்சர் ஆன்-மேரி ட்ரெவெல்யானுக்கு(22ம் பக்கம் பார்க்க)

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# ஹமாஸ் ஊடான ரணிலின் தனிப்பார்வை தமிழர் விவகாரத்தில் மாறுபடும் முரண்!

கட்டுரையாளர்:
கனடாவில் இருந்து
- பனங்காட்டான் -

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக உலகையும் ஊடகங்களையும் ஆக்கிர மித்து வந்த ரஸ்ய – உக்ரேனிய போர் இப்போது இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. கடந்த ஒரு வார மாக இஸ்ரேல் - ஹமாஸ் போராளிகளின் தாக்குதலும் ஹாசா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலும் 'கரண்ட் செய்தி கள்'.

மனந் திறந்து சொல்வதானால் இந்த நிகழ்வுகளை செய்திகள் என்று வெறு மனே சொல்வது நன்றன்று. அப்பாவி மக்கள் படுகொலைகள் முள்ளிவாய்க்கால் களத்தை நினைவூட்டுகின்றன.

ரஸ்ய – உக்ரேன் போர், தாய்வானைச் சுற்றிவளைக்கும் சீனக் கப்பல்கள், கனடிய – இந்திய ராஜரீக முறுகல் என்று எந்தப் பக்கம் திரும்பினாலும் மனித அவலத்தைக் குறி வைக்கும் நிகழ்வுகளே இடம் பெறுகின்றன.



தங்கள் நிலத்தைக் காப்பாற்ற எத்தனிக் கும் ஹமாஸ் தீவிரவாதிகள்தான் முதலில் தாக்குதலை ஆரம்பித்தனர். அதற்குப் பதிலடியாக ஹாசாவையே நாசமாக்கும் தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது. 24 மணிநேரத்துக்குள் ஹாசாவின் வடபுல மக்களை – 1.1 மில்லியன் பேரை அவ்விடத்திலிருந்து வெளியேற வேண்டுமென்ற அறிவித் தலை இஸ்ரேல் அதிகாரபூர்வமாக வெளி யிட்டது.

இதனை வாசிக்கும் வேளையில் இதன் அடுத்த கட்டத்துக்கு அனைத்தும் நகர்ந்திருக்கலாம். எத்தனை பேர் இது வரை கொல்லப்பட்டுள்ளார்கள். அடுத் தடுத்து இரு தரப்பிலும் எத்தனை பேர் கொல்லப்பட போகிறார்கள் என்பதை எவராலும் சொல்ல முடியாது. மற்றைய நாடுகள் இங்கு சிக்கியுள்ள தங்கள் நாட்டு மக்களை பாதுகாப்பாக வெளி யேற்றும் நடவடிக்கைகளை துரிதப்படு த்துகின்றன. ஆனால், ஏதுமறியாத போரிட மக்களைக் காப்பாற்ற ஆத்ம சுத்தியாக ஏதும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளரின் அறிக்கை மட்டும் அப்பாவி மக்களின் உயிருக்காக குரல் கொடுக் கிறது. சிக்குப்பட்டுள்ள மக்களை வெளியேற ஒரு வாசலைத் திறந்து விடு மாறு மன்றாடுகிறது. ஆனால் அதுவும் செவிடன் காதில் சங்கு போலவே காணப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் மனித அவலக் காலத் தில் பல சர்வதேச ஊடகங்கள் வல்லாதி க்க மேலாண்மை சார்புச் செய்திகளை எடுத்துச் சென்றன என்பது பலருக்கும் தெரியும். இப்போது இஸ்ரேல் - ஹமாஸ் நெருக்கடி காலத்திலும் அதே கோலந் தான். மெத்தப்பெரிய – அரசியல் செல் வாக்கான – முதலாளித்துவ நாடுகள் ஒருபக்கம் சாய்ந்து விட்டன. அடி பாட்டுக்குள் சிக்கும் மக்களுக்கான குரல்கள் ஓரங்கட்டப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தளவில் இரண்டு குரல்களை இதனை எழுதும் வரை கேட்க முடிந்தது. இரண்டும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட அரசியல் தரப்பி










லிருந்து வந்துள்ளன. எனினும் இரண் டிலும் ஒருவகை ஒற்றுமையைக் காண முடிகிறது. ஆனால், அதற்கான கார ணம் வேறு.

முன்னர் ரெலோ இயக்கத்தில் முக்கியஸ் தராகவிருந்த, தற்போதைய தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா ஓர் அறிக்கை மூலம் உண்மை நிலையை வெளிப்படுத்தியுள்ளார். இஸ்ரேலிலும் ஹாசாவிலும் (பாலஸ்தீனியர்) பொது மக்கள் உயிரிழப்பும், பாதிப்புகளும் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டி யுள்ள இவர், இதன் பின்னணியை அரச பயங்கரவாதத்துக்கும் விடுதலை இயக்க த்தின் பயங்கரவாதத்துக்குமான போர் என்று வகைப்படுத்தியுள்ளார்.

அதே சமயம், ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதலை நடத்தியதை சாட்டாக வைத்து ஹமாஸின் கட்டுப்பாட்டிலுள்ள ஹாஸா பிரதேசத்தை அடித்து தரை மட்டமாக் குவதற்கான காரணம், இப்பிரதேசத்தை இரண்டு துண்டுகளாக்கி அதில் ஒன்றை ஒட்டுமொத்தமாக விழுங்கி விடும் இலக்கு என்று பட்டவர்த்தன மாக படம் பிடித்துக் காட்டியுள்ளார் சிறீகாந்தா.

1993ல் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மத்தியஸ்தத்தில் இஸ்ரே லியத் தலைவர் யிற்சக் ரபினும் பாலஸ் தீனத் தலைவர் ஜசீர் அரபாத்தும் செய்த ஒப்பந்தம் செயலிழந்து போனதால் உரு வான சூழ்நிலையின் உச்சமாக தற்போ தைய மோதல் இருப்பதையும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறுதரப்பில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச பிரதிநிதிகள் கலந்து கொண்ட நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் தமது கருத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார். இந்த உரையில் இஸ்ரேலில் செல்வாக்கு செலுத்தி வரும் வல்லாதிக்க நாட்டினை நோக்கிய ரணிலின் பார்வை என்ன என்பதையும் அறிய முடிகிறது. இந்த உரையின் முக்கிய பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது:

வளர்ந்து வரும் புதிய உலகின் போக்கு என்னவென்று நான் ஓய்வாக இருந்த போது சில கருத்துகளை எழுதினேன். நேற்று அதனை கிழித்து விட்டேன். நேற்றைய எனது கருத்துகள் இன்று தேவையற்றதாகியுள்ளது. இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு என்ன நடைபெறப் போகிறது? அரசியல் அதன் இடத்தைப் பெறுவதை நாங்கள் காணலாம்.

இஸ்ரேல் இப்போது இப்போருக்காக ஒற்றுமை அரசாங்கம் ஒன்றை அமைத் துள்ளது. ஹமாஸை அழிப்பது ஒரு விடயம். அதற்கு எதிராக ராணுவ நடவடிக்கை எடுக்கலாம். அதற்கான எதிர்வினை என்ன? ஹாசாவை அழித் தால் 24 மணிநேரத்தில் முழு நிலைமை யும் மாறும். இங்கிருந்து இந்தோனே சியாவுக்கும் பிற இடங்களுக்கும் சென் றால் அரசாங்கங்கள் கட்டுப்பாட்டை இழக்கும்' என்று கூறிய ரணில் மேலும் பின்வருமாறு சொன்னார்:

ஒருபுறம் இஸ்ரேலிலுள்ள ஒற்றுமை அரசாங்கம் (கூட்டரசாங்கம்) பதிலடி கொடுக்க விரும்புகிறது. இவர்கள் ஹாஸாவுக்குள் சென்றால் முழு மத்திய கிழக்கும் தீப்பற்றி எரியும். இது நம் அனைவரையும் பாதிக்கும். ஒரு பக்கம் துருக்கி, மறுபக்கம் பிலிப்பைன்ஸ் என்று இது மத்திய ஆசியாவைப் பாதிக்கும். அடுத்த சில நாட்களில் என்ன நடைபெறும் என்பது தீர்மானிக் கப்படும். அதிபர் பைடனின் சப்பாத்து க்குள் நான் இருக்க விரும்பவில்லை. இந்தப் பிரச்சனையை அவர் எப்படிக் கையாள்கிறார்? இரு தரப்பிலும் கூட்ட ணிக் கட்சிகள் இருப்பது மோசமானது.

யூதர்களின் வாக்கு வங்கியையும், காங்கிரஸிடம் பேசுவதிலுள்ள சிரமத்தை யும் நினைத்துப் பார்க்க வேண்டியுள் ளது. காங்கிரஸ் தலைமையுடன் பேசு வதை விட ஹமாஸஜீடன் பேசுவது அவருக்கு எளிதாக இருக்கலாம். அது எவ்வளவு மென்மையானது. அவரது முடிவுகளைப் பொறுத்தே என்ன நடை பெறும் என்பது தீர்மானிக்கப்படும். எல் லாமே நாளை மாறக்கூடும். இப்பொழுது பின்வாசல் ராஜதந்திர முறையாக சில விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் மூலம் தீர்வு காண முடியாவிடின் உலகின் புதிய போக்கு என்ன என்பதை மீண்டும் முடிவு செய்ய வேண்டி வரும்' என்ற இந்த உரையை சாதார ணமான ஒன்றாக பார்க்க முடியாது. நிதானமான யதார்த்தமான தலைமை த்துவ பண்புள்ள பார்வையின் வெளிப் பாடு.

அதிபர் பைடனின் சப்பாத்துக்குள் இருக்க தான் விரும்பவில்லை என்ற சொல்லாடலின் ஊடாக தமது நிலைப் பாட்டை ரணில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதே இங்கு முக்கியமானது. இஸ்ரேல் – ஹமாஸ் பிரச்சனையில் தமது கருத்தை அம்மணமாகக் கூறும் துணிச்சல் அல்லது அசாதாரண நேர்மை கொண்ட ரணில் விக்கிரமசிங்க தமிழர் பிரச்சனைத் தீர்வை ஏன் வேறு விதமாகக் கையாளுகிறார்?

2002ல் விடுதலைப் புலிகளுடன் சமா தானப் பேச்சுகளை ஆரம்பித்த போது பின்கதவால் அதனை முறியடிக்கவென புலிகள் அமைப்புக்குள் பிளவை ஏற்படு த்தி கருணாவை தம்பக்கம் கொண்டு போனார்.

தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொள் ளும் இனப்பிரச்சனைக்கான தீர்வை கடந்த பெப்ரவரி 4ம் திகதிக்கு (சிங்கள தேச சுதந்திர நாள்) முன்னர் அறிவிக்கப் போவதாக உறுதியளித்தார். நடைபெற் றதா? லண்டனில் புலம்பெயர்ந்த தமிழர் தரப்புடன் நடத்திய உரையாடலில் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு அவர்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வு வழங்கப்படு மென்று நம்பிக்கை ஊட்டினார். நடை பெற்றதா?

ஒவ்வொருவரினதும் மத வழிபாட்டு உரிமைக்கு போதிய பாதுகாப்பு இரு க்குமென்று சொல்லி வந்தார். குருந்தூர் மலை விவகாரத்தில் நீதியாகத் தீர்ப் பளித்த நீதிபதிக்கு என்ன நிகழ்ந்தது? நீதிபதி எதற்காக நாட்டைவிட்டு ஓடிப் போனார்? 13ம்திருத்தம் அரசியலமை ப்பின் ஒரு பகுதி. அது முழுமையாக நிறைவேற்றப்படும் என்றவர் பின்னர், காவற்றுறை அதிகாரம் கிடையாது என்று சொன்னார். 13ம் திருத்தம் என்னாயிற்று?

போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை கேட்ட ஜெனிவா தீர்மானத்துக்கு நல்லாட்சி அரசில் பிரதமராக இருந்தபோது இணை அனு சரணை வழங்கினார். ஜனாதிபதியான பின்னர் ஏன் அதனை நிராகரித்தார்? இறுதியாக கடந்த ஆகஸ்ட் மாதம் அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் 13வது அரசியலமைப்புத் திருத்தம் இலங்கையின் நிறைவேற்றுத்துறையும் சட்டத்துறையும் சம்பந்தப்பட்டதால் அதனை நிறைவேற்றியே தீருவேன் என்றார். செய்தாரா?

பாலஸ்தீன மக்களின் உரிமைக்குரலுக் காக சர்வதேச அரங்கில் நியாயம் கூறுப வர், தனது நாட்டில் பாலஸ்தீன மக்கள் போன்று உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழின மக்கள் விடயத்தில் மாறுபாடாக நடந்து கொள்வது ஏன்? எதற்காக இரு நிலைப்பட்ட முரண்பாடு? ஊருக்கு உபதேசம், உனக்கல்ல என்ற சீத்துவக் கேடா?

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.


தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

14 ஒக்டோபர் 2023 முதல் 20 ஒக்டோபர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு மயில்வாகனம் நிமலராஜன்

எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின் உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளன் - ஊடகவியலாளர் திரு மயில்வாகனம் நிமலராஜன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 19 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு மயில்வாகனம் நிமலராஜன் அவர்களது ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகள் ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரகுநாதர் மயில்வாகனம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 21 ஒக்டோபர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணை ந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 22 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 40வது பிறந்த நாள் நினைவாக



### திரு கோபிநாத் கணேசமூர்த்தி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது 40வது பிறந்த நாள் 15 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பிறந்த நாள் நினைவாக அவரது பெற்றோர்களும் உறவுகளும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## மஹாலய விரத உபயம்




### திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 14 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35, 30வது ஆண்டு நினைவஞ்சலிகள்

### திரு தாமோதரம்பிள்ளை கந்தையா
### திருமதி கந்தையா வடிவாம்பிகை




வேலணை மேற்கு 6ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு தாமோதரம்பிள்ளை கந்தையா அவர்களது 35வது ஆண்டு நினைவாகவும் திருமதி கந்தையா வடிவாம்பிகை அவர்களது 30வது ஆண்டு நினைவாகவும் 16 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர்களான இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



14 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களது 53வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றைய தினத்திற்காகவும் மஹாலய உபயமாகவும் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




14 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் அன்னாரது குடும்பத்தினர் அன்றைய தினம் மஹாலய விரத உபயமாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




15 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் செல்வன் கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது 40வது பிறந்தநாள் நினைவாக அவரது பெற்றோர்கள் சகோதரங்கள், உறவுகள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை வேலணை மேற்கு 6ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு தாமோதரம்பிள்ளை கந்தையா அவர்களது 35வது ஆண்டு நினைவாகவும் திருமதி கந்தையா வடிவாம்பிகை அவர்களது 30வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



17 ஒக்டோபர் 2023 செவ்வாய்க்கிழமை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா தர்மபாலன் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 ஒக்டோபர் 2023 செவ்வாய்க்கிழமை இளவாலை பத்தாவத்தையைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் திரு செல்லத்துரை சுப்பிரமணியம் அவர்களது நினைவாகவும் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கோகிலா விவேகானந்தன் அவர்களது நினைவாகவும் கனடாவில் வாழும் ஓர் அன்பரால் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கப்பட்டது.




18 ஒக்டோபர் 2023 புதன்கிழமை மஹாலய விரத உபயமாக கனடாவில் வசிக்கும் திரு மனோகரன் கந்தையா திருமதி இந்திராணி மனோகரன் குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



18 ஒக்டோபர் 2023 புதன்கிழமை மஹாலய விரத உபயமாக கனடாவில் வசிக்கும் திரு மனோகரன் கந்தையா திருமதி இந்திராணி மனோகரன் குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



09 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் சமூகசேவையாளர் திரு விலோஜன் சிவதர்மமன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு விலோஜன் சிவதர்மன் அவர்கள் 19 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



19 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை பேச்சு – எழுத்து ஊடகத்துக்காக உயிர் பறிக்கப்பட்ட யாழ்ப்பாண ஊடகவியலாளர் திரு நிமலராஜன் மயில்வாகனம் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை பனிப்பிட்டிய மகரகமவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மாலினி குலேந்திரன் அவர்களது மூன்றாம் மாத நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்



**மறவாதீர்கள்! இவர்களுக்காக வாருங்கள்!**
**“ஊட்டும் கரங்கள்” நிகழ்வுத் திகதி**
**28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை**

# சிறப்பாக நடைபெற்ற எழுத்தாளர் இரா.சம்பந்தனின் "விழியும் துளியும்" சிறுகதைத் தொகுதி









கனடாவில் வாழும் சிறந்த எழுத்தாளரும் கவிஞருமான திரு இரா.சம்பந்தன் அவர்களது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பும் ஈழநாடு பதிப்பகத்தின் 10வது பதிப்புமான விழியும் துளியும் சிறுகதைத் தொகுப்பு










கடந்த 14 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை கனடா ஐயப்பன் இந்து ஆலய கலாசார மண்டபத்தில் மூத்த ஊடகவியலாளரும் கனமா தமிழர் தகவல் சஞ்சிகையின் ஆசிரியருமான திரு எஸ்.திருச்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வழமை போன்று இறை வணக்கம், அக வணக்கம் தமிழ்த்தாய் வாழ்த்து கனடிய தேசிய கீதத்துடன் ஆரம்பமான நிகழ்வை திரு ஞான பண்டிதன் அவர்கள் தொகு த்து வழங்கினார்.

விழாவுக்கு தலைமை தாங்கிய திரு எஸ்.திருச்செல்வம் அவர்களது தலைமையுரையையடுத்து சட்டத்தரணி நாதன் ஸ்ரீதரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

சிறந்த எழுத்தாளரும் இலக்கியவாதியுமான திரு பொன்னையா விவேகானந்தன் வெளியீட்டு உரை நிகழ்த்தினார். நூலினை திருமதி மீரா இராசையா, திரு தனபாலன் மார்க்கண்டு (தனபாலன் மாஸ்டர்) ஆகியோர் விமர்சன உரையாற்றினார்கள்.

திரு ஞானபண்டிதர் அவர்கள் நூலாசிரியரின் சிறப்புக் களை எடுத்துரைத்தார். ஈழநாடு பதிப்பகத்தின் சார்பில் ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் ரி.கே.பரமேஸ்வரன் பதிப்புரையாற்றியதைத் தொடர்ந்து திரு இரா.சம்பந்தன் அவர்கள் ஏற்றுரையாற்றினார். போட்டோ:- ஐயா





# நோகாமல் போராடும் கட்சிகளின் கடையடைப்பு?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



காந்தி சொல்வார்....அகிம்சை என்பது சாகத் துணிந்தவரின் ஆயுதம், அது சாகப் பயந்தவரின் ஆயுதம் அல்லவென்று. அகிம்சையில் மட்டுமல்ல வன்முறை போராட்டத்திலும் அதுதான் அடிப்படை விதி. அர்ப்பணிப்புக்குத் தயாராக இருப்ப வர்கள் தான் தலைமை தாங்கலாம். தியாக த்துக்கு தயாராக இருக்கும் தலைமை யின் கீழ் மக்கள் துணிந்து அணி திரள்வார்கள்.முன்னுதாரணம் மிக்க தலை வர்களின் பின் தான் மக்கள் அணி திரண் டிருக்கிறார்கள்.

ஆனால் தமிழரசியல் அரங்கில் முல்லைத் தீவு நீதிபதிக்கு ஆதரவாக நடந்து கொண்டிருக்கும் போராட்டங்களைத் தொகுத்துப் பார்த்தால், ரிஸ்க் எடுப்பதற்கு தயாரில்லாத தலைவர்கள் பொதுமக்களை ரிஸ்க் எடுக்குமாறு தூண்டுகிறார்களா? என்று கேட்கத் தோண்றுகிறது.

ஏழு கட்சிகள் இணைந்து கடந்த வாரம் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தின. அது பெரிய வெற்றியைப் பெறவில்லை. இப்பொழுது ஒரு கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. முல்லைத்தீவு நீதிபதி நிலப் பறிப்பு சிங்களபௌத்த மயமாக்கல் மேய்ச்சல் தரை போன்ற எல்லா விவகாரங்களு க்குமாக வடக்குக் கிழக்கு முழுவத்து க்குமாக கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் கொங் கிரசும் அதற்கு ஆதரவு தருவதாக வாக்குறுதி அளித்ததாக ஒரு தகவல். முதலில் இந்த வாரம் கடையடைப்பு என்று கூறப்பட்டது. ஆனால் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை காரணமாக திகதியை ஒத்தி வைக்குமாறு கேட்கப்பட்டது. அதனால் வரும் இருப தாம் திகதி, வெள்ளிக்கிழமை பூரண கடையடைப்பு என்று அறிவிக்கப்பட் டிருக்கிறது. ஏன் வெள்ளிக்கிழமை தேர்ந் தெடுக்கப்பட்டது என்பதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது காரணம், குறுகிய காலத்து க்குள் ஒழுங்கு செய்யக்கூடிய ஒரு போராட்டம் அது தான் என்பது. இரண்டாவது காரணம், பெரிய போராட் டங்களுக்குத் தேவையான நிதியை உடனடியாகத் திரட்டுவதில் உள்ள சவால்கள். மூன்றாவது காரணம், வடக் குக் கிழக்கு தழுவிய ஒரு போராட்டம் குறிப்பாக முஸ்லிம்களையும் உள்ளடக் குவது என்று பார்த்தல் கடையடைப்பே வசதியானது. நாலாவது காரணம், அது வார இறுதி என்பதால் அன்றைக்கு வியாபாரம் பெரியளவு நடக்காது. எனவே வணிகர்கள் கடைகளை மூடச் சம்மதிப் பார்கள். ஐந்தாவது காரணம், அன்றைக்கு ஒன்பதாம் ஆண்டுக்கு உட்பட்ட பிள்ளை களுக்கு தனியார் வகுப்புகள் நடக்காது. எனவே அந்தக் கடையடைப்பால் பிள்ளைகளின் படிப்பு அதிகம் பாதிக்கப் படாது. ஆறாவது காரணம், வெள்ளிக் கிழமை என்பதனால் முஸ்லிம்களும் அந்நாளில் கடைகளை மூடத் தயார் என்பது. இக்காரணங்களினால் அந்த வெள்ளிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அதைவிட முக்கியமாக மூன்று காரணங்கள் உண்டு. முதலாவது கார ணம், தமிழ் அரசியல்வாதிகளிடம் 2009 க்குப் பின்னரான அறவழிப் போராட்டம் தொடர்பாக பொருத்தமான தரிசனங்கள் இல்லை என்பது. அவர்கள் போராடுவோம் போராடுவோம் என்று கூறுகிறார்கள், ஆனால் எப்படிப் போராடுவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. புதிய போராட்ட வடிவங்களைக் கண்டு பிடிக்க அவர்களால் முடியவில்லை.

அதனால்தான் பழைய, வழக் கொழிந்த, அல்லது சிறு திரள் கவனஈர்ப்புப் போராட் டங்களைச் செய்து கொண்டிருக்கி றார்கள். பெருந்திரள் மக்கள் போராட்டங் களை ஒழுங்குபடுத்த அவர்களால் முடிய வில்லை.

இரண்டாவது காரணம், அவர்களிடம் மக்களைத் திரட்டத் தேவையான அடி மட்டக் கட்டமைப்புக்கள் இல்லை. ஏற்கனவே பலமாக உள்ள கட்டமைப்புக் களில் தான் தங்கியிருக்கிறார்கள். ஏற்க னவே உள்ள சிவில் கட்டமைப்புக்கள் சம்மதித்தால், ஒருநாள் வாழ்க்கையை ஒப்பீட்டளவில் முடக்கலாம். உதாரண மாக வணிகர் கழகங்கள்,தனியார் வாகன உரிமையாளர்கள், சந்தை நிர்வாகங்கள்... போன்றன ஒத்துழைத்தால் கடைகளை, சந்தைகளை மூடலாம் பொதுப் போக்கு வரத்தை முடக்கலாம்.

மூன்றாவது காரணம், அவர்கள் ரிஸ்க் எடுக்கத் தயாரில்லை. இதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால், அவர் கள் தங்களுடைய மக்களுக்கு தங்களு டைய அரசியல் இலக்குகளுக்கு விசுவாச மாக இல்லை. அதற்காக அர்ப்பணிப் போடு போராடத் தயாரில்லை. சிவப்பு மஞ்சள் கொடிகளைக் கட்டி, தாயகம் தேசியம் சுயநிர்ணயம்....என்று கோஷம் வைத்தால் தமிழ் மக்கள் தங்களின் பின் வருவார்கள் என்று கற்பனை செய்கிறார் கள். அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட பெயர்களை முன்னிறுத்தி அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சின்னங்களை முன்னிறுத்தி வாக்குகளைத் திரட்ட ஆசைப்படுகிறார்கள். ஆனால் ஒரு புதிய சின்னத்தை ஒரு புதிய கொடியை அறி முகப்படுத்தி அதற்காக அர்ப்பணித்து தம்மை உருக்கிப் போராடி அந்தச் சின்னத்தை, அந்தப் புதிய பெயரை மக்களுடைய மனங்களில் ஆழமாகப் பதிய வைக்க அவர்களால் முடியவில்லை. இந்த இயலாமைகள் தான் அரசியல்வாதி கள் தங்களுக்கு நோகாத போராட்டங் களை தேர்ந்தெடுக்க காரணம்.

தாங்கள் ரிஸ்க் எடுத்து தாங்கள் முன் நின்று போராடத் தயாரில்லாத அரசியல் தலைவர்கள் மக்களுக்கும் நோகாமல் தங்களுக்கும் நோகாமல் எப்படிப் போராடு வது என்று சிந்தித்து கண்டு பிடித்த ஒரு போராட்டந் தான் கடையடைப்பா? கடந்த வாரம் அவர்கள் ஒழுங்குபடுத்திய மனிதச் சங்கிலிப் போராட்டம் போராட்டம் ஏன் வெற்றி பெறவில்லை என்பதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளாத கட்சிகள் மீண்டும் ஒரு தடவை தங்களுக்கு நோகாத ஒரு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றனவா? ஏற்கனவே, இந்த ஆண்டு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கேட்டு ஒரு கடை யடைப்பு நடத்தப்பட்டது. இப்பொழுது மேலுமொரு கடையடைப்பு.

எந்த ஒரு போராட்டமும்,அது ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி அகிம்சைப் போராட்டமாக இருந்தாலும் சரி,அது பிரதானமாக இரண்டு விளைவு களை ஏற்படுத்த வேண்டும்.

முதலாவது விளைவு, அகவயமானது. அது மக்களை போராட்டத்தை நோக்கித் திரட்ட வேண்டும். குறிப்பிட்ட அமைப் பின் கீழ் அல்லது கட்சியின் கீழ் மக்கள் ஒரு திரண்ட சக்தியாக, ஆக்க சக்தியாக மாற்றப்பட வேண்டும். அந்த மக்கள் திரட்சிதான் எதிரியைப் பணிய வைக்கும் வெளி உலகத்தைப் போராட்டத்தை நோக்கி ஈர்க்கும். எனவே எந்த ஒரு போராட்டமும் மக்களை ஒரு மையத்தில் திரட்டி மகத்தான ஆக்க சக்தியாக மாற்றக் கூடியதாக இருக்க வேண்டும்.

இரண்டாவது விளைவு புறவயமானது. அப்போராட்டமானது எதிர்த்தரப்புக்கு வலியை ஏற்படுத்த வேண்டும். சேதத்தைத் தாக்கத்தை இழப்பை ஏற்படுத்த வேண் டும். எதிர்த் தரப்பின் பொருளாதாரத்தை அல்லது நிர்வாகத்தை முடக்க வேண் டும். எந்த ஒரு போராட்டமும் எதிர்த் தரப்புக்கு தாக்கமான சேதத்தை ஏற்படு த்தவில்லையென்றால் அங்கே அரசியல் வலுச்சமநிலை மாறாது. அரசியல் வலுச் சமநிலையை மாற்றக்கூடிய சக்தி போராட் டத்திற்கு இருக்க வேண்டும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் கடை யடைப்பு என்ற போராட்ட வடிவத்தைப் பார்ப்போம். இக்கட்டுரை கடையடை ப்பை நிராகரிக்கவில்லை. கடையடைப் பில் ஒரு அடிப்படை நன்மை உண்டு. என்னவெனில், மக்கள் தாமாக முன்வந்து கடைகளை மூடும்பொழுது அங்கே ஒரு கூட்டுணர்வு ஏற்படும். ஒரு நாள் உழை ப்பை இழப்பதற்கு தயாராகும் மக்கள் தங்களால் இயன்ற தியாகத்தை அன்றை க்குச் செய்கிறார்கள். அதனால் வரும் இழப்பை ஏற்றுக் கொள்ளச் சித்தமாய் இருக்கிறார்கள். எனவே போராட்ட நெரு ப்பை ஒரு சிறு அளவுக்கேனும் அணை யாமல் வைத்திருக்க அந்த நாள் உதவும். மக்களை குறைந்தபட்சம் ஒரு தேசமாகத் திரட்ட அது உதவும்.அதாவது கடை யடைப்பால்,அகவயமான நன்மையுண்டு.

இந்த ஒரு நன்மை தான் கடையடைப் பில் உண்டு. மற்றும்படி ஒருநாள் கடையடைப்பு தமிழ் வணிகர்களுக்கும் அன்றாடம் உழைப்பவர்களுக்கும் ஏற்படு த்தக் கூடிய இழப்பை விடவும் அதிகரித்த இழப்பை அரசாங்கத்திற்கு ஏற்படுத்துமா? அல்லது அது உலகத்தை திரும்பிப் பார்க்க வைக்குமா?

கடந்த ஆண்டு டெல்லியில் விவசாயிகள் தொடர்ச்சியாகப் போராடினார்கள். ஆசிரியர் கள் அதிபர்கள் தொடர்ச்சியாகப் போராடி னார்கள். கோட்டா கோகம போலவே விவசாயிகளின் போராட்டமும் உலகின் கவனத்தை ஈர்த்தது. முடிவில் இந்திய அரசாங்கம் விவசாயிகளின் கோரிக்கைகளு க்குப் பணிந்தது.

ஆனால் ஏழு கட்சிகளின் ஒரு நாள் கடை யடைப்பு அரசாங்கத்தைப் பணிய வைக் குமா? அல்லது தமிழ் மக்கள் எதிர்க் கிறார்கள் என்ற ஒரு விடயத்தை உலகத் துக்கும் அரசாங்கத்துக்கும் உணர்த்து வது மட்டும் தான் கடையடைப்பின் நோக்கமா? அல்லது தமிழ்க் கட்சித் தலைவர்கள் நோகாமல் போராடுவதற்கு வசதியான ஒரு போராட்ட முறை தான் கடையடைப்பா?





சட்டமா அதிபரின் (அரசு) அழுத்தத்தத்தினால் பதவியைத் துறந்ததாகச் சொல்லப்படும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு ஆதரவு தெரிவித்தும் அரசின் செயற்பாடுகளை எதிர்த்தும் பல விதமான போராட்டங்கள் தமிழ்ப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் போராட்டங்களில் வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் அரசியற் கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களும் கலந்து கொள்கின்றனர். சில போராட்டங்களை இவற்றில் சில தரப்புகள் முன்னெடுப்பதையும் காண முடிகிறது.

அதில் ஒரு போராட்டம், ஆநீதி தேவதைக்கு அரோஹரா இலங்கைக்கு அரோஹரா என்று கொக்குவிலில் நடந்தது. இந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் என்ன கருதினார்களோ தெரியாது. ஆனால், பலருக்கும் இது பகடியாகவே பட்டது.

வில்லை. ஹர்த்தாலையும் தமது அரசியற் செயற்பாட்டில் ஒன்றாகக் கையாண்டனர். அதில் வெற்றியும் கண்டனர்.

இங்கே முன்னெடுக்கப்படுகின்ற ஹர்த்தால் அப்படியானதல்ல. இதனால் ஒரு ஆணியையும் பிடுங்க முடியாது. இதை நமது அரசியல் தலைவர்(?)களும் நன்றாக அறிவர். ஆனால், அவர்களுக்கு வேறு கதியில்லை. ஏனென்றால் செயற்பாட்டு அரசியலை முன்னெடுப்பதற்கு யாரும் தயாரில்லை. புதிதாகச் சிந்திக்கும் திறனும் அவர்களிடம் கிடையாது. ஊடகர்கள், அரசியல் பத்தியாளர்கள், மக்கள் எல்லோருக்கும் கூட இதைப் பற்றித் தெரியும்.

ஆகவே எல்லோரும் தெரிந்து கொண்டே ஆடுகிற நாடகம் இது. அப்படியென்றால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் என்று தானே களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பதால் (புலம்பிக் கொண்டிருப்பதால்) எந்தப் பயனுமில்லை.

அரசு இந்த மாதிரிப் புதிய புதிய பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறது. நில அபகரிப்பு, தொல்பொருட் திணைக்களத்தின் தவறான அல்லது அவசியமற்ற நடவடிக்கைகள் (தலையிடிகள்), பல்வேறு விதமான அச்சுறுத்தல்கள், அதிகாரக் குழப்பங்கள் (மத்தி, மாகாணம் போன்றன), நிர்வாக ஒழுங்கீனங்கள் (ஆளுனர், அதிகாரிகள் நியமனங்கள் தொடக்கம் நிதி ஒதுக்கீடுகள், நிதிக்கையாளல்கள் போன்றவை) இப்படி எதையாவது அவ்வப்போது உருவாக்கி குழப்பிக் கொண்டேயிருக்கிறது.

அப்படியானவற்றில் ஒன்று தான் நீதிபதி சரவணராஜா விவகாரமும்.

இது தீர முன்பு இன்னொரு புதிய

# ஹர்த்தால் விளையாட்டில் சோடை போன கட்சிகள்

இன்னொரு போராட்டம், மனித சங்கிலிப் போராட்டமென யாழ்ப்பாணத்தில் நடந்தது. அதுவும் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை.

இறுதியாக ஹர்த்தால் அறிவிக்கப்பட்டது. இதனை ஏழெட்டுக் கட்சிகள் இணைந்து அறிவித்துள்ளன. இதுவும் புதிதல்ல. வழமையாக இந்தக் கட்சிகள் செய்கின்ற வேலை தான். இதனுடைய பயன் எப்படி அமையும் என்று எல்லோருக்குமே தெரியும்.

வடக்குக் கிழக்கில் கடைகள், சந்தைகள் மூடப்படும். சந்தைகள் இயங்காது. பொதுப் போக்குவரத்து முடங்கும். இதிலும் அரச பேருந்துகளும் புகையிரத சேவையும் முடங்காது. அரச திணைக்களங்களும் பாடசாலைகளும் வழமையைப் போல நடைபெறும். மாணவரின் வருகை சில இடங்களில் குறைந்திருக்கும். நகரங்கள் வெறிச்சோடிப் போயிருக்கும். மற்றப்படி எல்லாமே வழமையைப் போல நடக்கும்.

மாலையில் தமிழ் இணையத் தளங்களும் மறு நாள் தமிழ்ப் பத்திரிகைகளும் வடக்குக் கிழக்கு முடங்கியது. ஹர்த்தால் பூரண வெற்றி. அரசுக்குச் சாட்டையடி என்றவாறாகச் செய்திகளை வெளியிடும். அதோடு வரலாற்றுக் கடமை முடிந்து விடும். இதற்கப்பால் ஹர்த்தால் எந்தப் பயனையும் தமிழ்ச்சமூகத்துக்குத் தந்து விடாது.

ஏறக்குறைய இதொரு சுய இன்ப விளையாட்டுத் தான். அல்லது நாமே நம்முடைய முதுகில் தட்டிப் பாராட்டிக் கொள்ளும் சங்கதியே.

ஹர்த்தால் என்றால் அது அரசை, ஆட்சியாளர்களை முடக்குவதாக இருக்க வேண்டும். அரசும் ஆட்சியாளர்களும் திணற வேண்டும். அப்பொழுது தான் ஹர்த்தாலின் தாக்கம் எப்படியானது என்று அதற்குப் புரியும். வடக்குக் கிழக்கில் மட்டும் நிகழ்த்தப்படும் ஹர்த்தால் வடக்குக் கிழக்கு மக்களை மட்டுமே பாதிக்கும். அரசுக்கு உண்டாகும் பாதிப்பு மிக மிகச் சிறியதாகவே இருக்கும். ஆகவே இதையிட்டு அரசு கணக்கிற் கொள்ளாது. இது தான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

அப்படியென்றால் ஹர்த்தால் தோற்றுப் போன அரசியல் வடிவமா.? என்று நீங்கள் கேட்கலாம்.

ஜனநாயக ரீதியாக மக்களும் அரசியற் தரப்பினரும் முன்னெடுக்கக் கூடிய மிகச் சிறந்த போராட்ட வடிவங்களில் ஒன்று ஹர்த்தால். அப்படித் தான் காந்தி தொடக்கம் பலரும் ஹர்த்தாலைக் கையாண்டிருக்கிறார்கள். தனியே ஹர்த்தாலுடன் மட்டும் அவர்கள் நின்று விட அர்த்தம்! இதற்குக் காரணம், தமிழ் அரசியலின் கையறு நிலையாகும். இனி என்ன செய்வது என்று தெரியாது குழம்பிக் கிடக்கிறது தமிழ்ச்சமூகம்.

முக்கியமாக இது போருக்கு முந்திய காலமா? போர்க்காலமா? போருக்குப் பிந்திய காலமா? என்ற தெளிவே பலரு



க்குமில்லை. ஏனென்றால், போருக்கு முந்திய கால Pre-war politics (1980 க்கு முந்திய) அரசியலே இப்பொழுது முன்னெடுக்கப்படுகிறது. அதே சொல்லாடல்கள். அதே அறிக்கைகள். அதே பிரகடனங்கள். அதே அரசியல் வழிமுறைகள்.

ஆனால், அதற்குப் பிறகு எவ்வளவோ நடந்து விட்டன. முக்கியமாக 30 ஆண்டுகளாக போர்க்கால அரசியல் (Wartime Politics) மேற்கொள்ளப்பட்டது. இப்பொழுது போருக்குப் பிந்திய கால அரசியலை (Post-war politics) முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். ஆனால் அது முன்னெடுக்கப்படவில்லை. இதற்கான புரிதல் — விளக்கம் பலரிடத்திலும் இல்லை.

போர்க்குற்ற விசாரணை, அரசியற் கைதிகள் விவகாரம், காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான குற்றச்சாட்டு, மனித உரிமைகளுக்கு விடுக்கப்பட்ட சவால் அல்லது நெருக்கடி, நில மீட்பு போன்றனவெல்லாம் போருக்குப் பிந்திய கால (Post-war politics) அரசியல் தானே என்று நீங்கள் கேட்கலாம்.

இவையும் அவற்றில் அடங்கும். ஆனால் இவை மட்டுமல்ல நமது அரசியல் முன்னெடுப்புக்குரியவை. இவை உப பிரச்சினைகள். பிரதான பிரச்சினைகள் வேறு. அவை பலவித மானவை. அவற்றைப் பற்றிய கரிசனையே நமக்கிருப்பதில்லை. அல்லது அவற்றின் மீதான கவனம் குவிக்கப்படுவது குறைவு. தவிர சமகாலச் சிக்கல்களாக இருக்கும் இந்தப் பிரச்சினை பிரச்சினையை நம்முடைய காலடியில் கொழுத்திப் போட்டு விடும். அப்பொழுது நாம் அதற்குப் பின்னே ஓடுவோம். ஓடுக்குமுறை அரசுகளின் உத்தி அப்படித்தானிருக்கும். இதைப் புரிந்து கொண்டு இதை முறியடிக்கும் ஆற்றலுடன் நமது அரசியலை முன்னெடுக்க வேண்டும். ஆனால் அதற்கு ஆளில்லை. அப்படி யாராவது முன்வந்தாலும் அதை ஆதரிப்பதற்கும் ஆளில்லை. ஆகவே தான் இந்த மாதிரிக் ஹர்த்தால் விளையாட்டு. இதைச் சோம்பேறி அரசியலின் வடிவமாக்கியாயிற்று.

செயற்பாட்டு அரசியலின் பலவீனமே இப்படியான நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. அடுத்தது புதிதாகச் சிந்திக்க முடியாத — அப்படிச் சிந்திப்பதற்கு அச்சப்படும் தயக்கம். இதனால் தான் இந்த மாதிரிப் பழைய குப்பையைக் கிளறி எதையாவது எடுப்போம் என இலகுவழியில் சிந்திக்கத் தூண்டுகிறது. இதில் செயற்பாட்டியக்கப் பாரம்பரியத்திலிருந்து வந்த சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோரும் சிக்கியிருப்பதுதான் வரலாற்றின் துயரம். இவர்களும் தோற்றுப் போன அரசியல் வடிவத்திற்குள் சிக்குண்டிருப்பது கவலையளிப்பது. இவர்களாவது புதிதாகச் சிந்திக்க வேண்டும்.

அடுத்த தலைமுறை என்று சொல்லப்படும் இளைஞர்களாக இருப்போரும் ஹர்த்தால், எதிர்ப்புப் போராட்டம் என்று அங்கங்கே நடத்தப்படுகிற குட்டிக் குட்டி எதிர்ப்புகளுக்கு அப்பால் சிந்திக்கக் கூடியவர்களாக இல்லை. பல்கலைக்கழக மாணவர் இயக்கங்கள் எப்போதோ காலாவதியாகி விட்டன. இளைஞர்களுக்கு அடையாளமான புதிய சிந்தனைத் திறனோ, துடிப்போ, புதியன ஆக்கும் பண்போ, கூட்டுழைப்போ இல்லாமற் போய்விட்டது.

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



ஆகவே தான் கையறு நிலையின் வெளிப்பாடு இது என்ற நிலை வந்திருக்கிறது.

அப்படியல்ல, ஹர்த்தாலுக்கு இன்னும் மதிப்புண்டு என்றால், அதொரு வீரிய மிக்க போராட்ட வடிவம்தான் என்றால் அதைப்போல இப்பொழுது பதவியிலிருக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக பதவியை ராஜினாமாச் செய்யலாம். அவர்களுடைய இடத்துக்குப் பதிலாக அடுத்த நிலையில் உள்ளவர்கள் உடனே முண்டியடித்து அந்தப் பதவியை ஏற்காமல் அவர்களும் அதை நிராகரிக்க வேண்டும். அரசு சார்ப்புக் கட்சிகளில் அல்லது சிங்களக் கட்சிகளில் போட்டியிட்டவர்கள் அந்த இடத்தை நிரப்புவார்கள் அல்லவா என்று நீங்கள் கேட்கலாம்.

வடக்கில் அநேகமாகப் போட்டியிட்டவர்கள் எல்லோரும் தமிழர்கள் தான். வன்னியில் முஸ்லிம்களும் சில சிங்கள வேட்பாளர்களும் உண்டு. ஆனால் அங்கயன், விஜயகலா தொடக்கம் இவர்கள் அனைவரும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குத் தாமும் ஆதரவு என்று சொல்வதுடன் விடுதலைப்புலிகளையும் தாம் ஆதரிப்பதாகப் பகிரங்கமாகவே சொல்லிக் கொண்டிருப்பவர்கள். ஆகவே இந்தச் சூழலில் இவர்களுடைய முகமூடிகள் அப்போது வெளிப்படும். அல்லது உண்மை நிலவரப்படி இவர்களும் நிராகரிப்புச் செய்து நெருக்கடியை உண்டாக்குவர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகினால், அதற்குப் பிறகு பட்டியலில் உள்ளவர்களும் பதவியை ஏற்காமல் விட்டால் என்ன நடக்கும் என்று சில நண்பர்கள் கேட்கிறார்கள். அப்படியிருந்தால், அவை வெற்றிடமாகும். இடைத் தேர்தல் பற்றி யோசிக்க வேண்டியிருக்கும். ஒப்பீட்டளவில் இந்தக் ஹர்த்தால், பேரணி, சிற்றணி போன்ற எதிர்ப்புகளை விட இது பெரிய எதிர்ப்பாக இருக்கும்.

இத்தகைய ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாக 1990 இல் ஈரோஸ் இயக்கத்தின் (ஈழவர் ஜனநாயக முன்னணியின்) 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியைத் துறந்திருந்தனர். அன்று அதொரு பெரிய வினையாக இருந்தது.

அப்படிச் செய்தாலும் ஒன்றும் நிகழப் போவதில்லை எனினும் எதிர்ப்பின் வடிவம் அது. இன்னும் சொன்னால், இந்தக் ஹர்த்தால் விளையாட்டை விட அது கொஞ்சம் கவர்ச்சியான விளையாட்டாக இருக்கும். உலகத்தின் புருவத்தைக் கொஞ்சம் உயர்த்த வைக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு
பத்திரிகையை eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்

# விடுதலைப்புலிகள் இயக்கமும் ஹமாஸ் இயக்கமும்

பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையும் பலஸ்தீனம் தனி நாடாக வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் பதினொரு வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அத்துடன் கமாஸ் இயக்கத்துக்கு ஐ.நா.வில் பார்வையாளர் அந்தஸ்தும் வழங்கப்பட்டிருக்கிறது.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக 139 நாடுகளும், எதிராக ஒன்பது நாடுகளும் அன்று வாக்களித்திருந்தன. 41 நாடுகள் வாக்களிப்பில் பங்கெடுக்கவில்லை. ஐரோப்பிய நாடுகள் உட்பட இந்திய, இலங்கை போன்ற பல நாடுகளும் ஐ.நா சபையில் இதனை ஏற்றுமுள்ளன. அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட ஒன்பது நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்திருந்தன. இஸரேலுக்கு ஆதரவாக அமெரிக்க செயற்பட்டு வரும் பின்னணியிலேயே மீண்டும் கமாஸ் இஸ்ரேல் மீது போரைத் தொடுத்துள்ளது.

அமெரிக்கா மீது அல்கைதா இயக்கம் 2011 செப்ரெம்பரில் நடத்திய தாக்குதலுடன் கமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலை மேற்கு நாடுகள் ஒப்பீடு செய்கின்றன.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரமப் பென்ஜமீன் நெதன்யாகு உரிய முறையில் செயற்படவில்லை என்றும் தான் மீண்டும் ஜனாதிபதியாகப் பதவியேற்றால் இஸ்ரேல் நாட்டை முழுமையாகப் பாதுகாப்பேன் எனவும் கூறியிருக்கிறார். பென்ஜமீன் நெதன்யாகுவுக்கு எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார்.

ஆகவே பலஸ்தீனம் என்ற தேசத்தை இல்லாதொழிப்பதே அமெரிக்காவின் நோக்கம் என்பது பட்டவர்த்தனமாகிறது. ஐ.நா.வில் அங்கீகாரம் இருந்தும் அதனைக் கடந்து அமெரிக்காவும் இஸ்ரேலும் இவ்வாறு செயற்படுகின்ற என்றால் சர்வதேச அங்கீகாரம் இல்லாத நிலையில் ஒரு நிழல் அரசாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளை அழிக்க 2009 இல் அமெரிக்கா எவ்வாறான வியூகங்களை வகுத்திருக்கும் என்பது இங்கே பகிரங்கமாகிறது.

ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் குறிப்பாக 1983 இல் வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற உத்திகள் இஸ்ரேல் அரசினால் வகுக்கப்பட்டது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

தற்போது அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச எதிர்ப்புகளையும் மீறி ஈரான் அணுசக்தி திறன்களில் முன்னேறி வரும் நிலையில் இஸ்ரேல் மீது கமாஸ் தாக்குதல் நடத்தியிருக்கிறது. ஆனால் இஸ்ரேல் நடத்தும் பதில் தாக்குதல்களை தாக்குப் பிடிக்கக்கூடிய நிலையில் கமாஸ் இல்லை. ஆனாலும் ஈரான் உட்பட மத்திய கிழக்கு நாடுகளின் நேரடி ஆதரவு கமாஸுக்கு பலத்தைக் கொடுக்கலாம்.

சர்வதேச இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் மற்றும் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் ஈரான் அணுசக்தித் திட்டத்தில் முன்னேறி வருவதாக ஜிஜோபொலிற்றிகல்மொனிற்றர் (geopoliticalmonitor) என்ற ஆய்வுத்தளம் கூறுகின்றது. ஈரானின் அணுசக்தி முன்னேற்றத்தைத் தடுக்கச் சர்வதேசம் கையாண்ட வியூகங்கள் வெற்றியளித்தாக இல்லை. இந்த நிலையில் தான் இஸ்ரேல் பலஸ்தீன மோதல் ஆரம்பித்திருக்கிறது என்ற தொனியில் அந்த ஆய்வுத் தளம் சுட்டி க்காட்டுகிறது.

அதேவேளை இஸ்ரேல் அரசு நீதித்துறையில் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் இஸ்ரேலிய இராணுவத்தின் மன உறுதியைப் பாதித்துள்ளது எனவும் இஸ்ரேலிய இராணுவத்திற்குள் ஏற்பட்டுள்ள மனக் கசப்புகள் பலஸ்தீனியர்களுடனான போர்க் களத்தில் பாதிப்பை உருவாக்கலாமென மொடேன்டிப்ளேமேசி என்ற மற்றொரு ஆங்கில ஆய்வுத் தளம் கூறுகின்றது.

இலங்கைத்தீவில் தற்போது ஜனாதிபதி ரணில் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் போன்றே இஸ்ரேலியப் பிரதமரும் உள்ளக அரசியல் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறார். இந்த நிலையிலே தான் போரும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தில் கைச்சாத்திடப்பட்ட ஆபிரகாம் உடன்படிக்கைக்குப் பின்னர் ஜோ பைடன் நிர்வாகம் மத்திய கிழக்கில் மோதல்கள் மற்றும் சிக்கல்களை இயல்பாக்குவதில் முக்கிய கவனம் செலுத்தி வந்தது. இது இஸ்ரேலுக்கும் சவுதி அரேபியாவுக்கும் அமெரிக்கா தலைமையில் மும்முனை பேச்சுவார்த்தைக்கு வழிவகுத்தது.

இந்த நிலையில் சவுதி அரேபியா இஸ்ரேலுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கவும் தயாராக இருந்தது. ஆனாலும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் பிற்போக்குத்தனமான அத்துமீறல்கள் மத்திய கிழக்கு நாடுகளை கோபமடையச் செய்திருக்கின்றன. ஆகவே பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், மத்திய கிழக்கை நிலைநிறுத்துவது கடினம் என்பதை இஸ்ரேல் — பாலஸ்தீன மோதல் அமெரிக்காவுகுக்கு உணர்த்தியிருக்கும்.

ஆனாலும் கமாஸின் தாக்குதலையடுத்து இஸ்ரேல் போர் பிரகடனம் செய்துள்ளது. இதனால் சவுதி அரேபியா, கட்டார் மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் இஸ்ரேல் மீது குற்றம் சுமத்திக் கமாஸ் தாக்குதலை நியாயப்படுத்தியுமுள்ளன. இதனால் இந்திய — மத்திய கிழக்கு — ஐரோப்பா வழித்தடத் தாழ்வாரத் திட்டம் (India-Middle East-Europe Economic Corridor – IMEEC) கேள்விக்குள்ளாகியுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் பிறிக்ஸ் மாநாட்டுத் தீர்மானங்கள் மற்றும் உலகில் உள்ள பிரதான ஆறு எண்ணெய்வள நாடுகள் பிறிக்ஸில் அங்கத்துவம் பெற்றமை போன்ற காரண — காரியங்கள் அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சவாலாக இருந்த நிலையில் தான் IMEEC எனப்படும் திட்டம் பற்றிய அறிவிப்பை புதுடில்லி, ஜீ20 மாநாட்டில் வெளியிட்டிருந்தது.

மத்திய கிழக்கில் சீனாவின் செல்வாக்கை வலுவிழக்கச் செய்வதற்காக மோடியின் வாயினால் ஜோ பைடன் இத் திட்டத்தை அறிவித்திருந்தார் என்று கருதலாம். ஆனாலும் ரசிய — சீனக் கூட்டுக்குள் குறிப்பாக பிறிக்ஸ் கட்டமைப்புக்குள் இந்தியா இருந்துகொண்டு மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்ற முறையில் புதுடில்லியினால் முன்வைக்கப்படும் திட்டங்கள், அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்களுக்குத் திருப்தியாக இருப்பதாகக் கூற முடியாது.

இஸ்ரேல் பலஸ்தீன மோதலில் இந்தியா இஸ்ரேலுக்கு ஆதரவு என்பது பட்டவர்த்தனம். ரசிய உக்ரெயன் போரிலும் இந்திய நிலைப்பாடு ரசிய ஆதரவை நோக்கியே உள்ளது. ஆகவே அடுத்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரவுள்ள நிலையிலும் ஈரானின் அணுசக்தித்திறன் முன்னேறி வரும் பின்னணியிலும் மேலும் புவிசார் அரசியல் மோதல்களை இது உருவாக்கலாம். குறிப்பாக மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளைத் திருப்திப்படுத்தும் இந்தியத் திட்டங்களும் ஆபத்துக்களை ஏற்படுத்தலாம். ஆனால் ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை இல்லாதொழிப்பதற்கு 2009இல் இந்தியாவை மையப்படுத்திய புவிசார் அரசியல் — பொருளாதார சூழல் வசதியாக இருந்தமை போன்று, கமாஸை இல்லாதொழிக்கக் கூடிய புவிசார் அரசியல் பொருளாதார சூழல் இஸ்ரேல் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியா போன்ற ஒரு நாடு பலஸ்தீனியர்களுக்கு அருகிலும் இல்லை.

உதாரணமாக இந்தியா என்றொரு சக்திக்குத் தேவையான ஒரு முனையில் வடக்குக் கிழக்குப் பிரதேசம் அமைந்துள்ளதாலேயே ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் வெற்றிபெற முடியவில்லை என்ற கருத்து இன்றும் நிலவுகிறது. அக் கருத்தில் உண்மை இல்லாமலுமில்லை.

அன்று அமெரிக்காவுடன் பனிப்போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்தியா குறிப்பாக இந்திராகாந்தி, 1983 இல் ஆயுதப் போராடடம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அமெரிக்காவுடனான இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றத்தைச் செய்தமைக்கான காரண காரியங்களும் புரியாமலில்லை. ஆகவே அமெரிக்க எதிர்ப்பு நாடுகள் குறிப்பாக ஈரான் உட்பட மத்திய கிழக்கு நாடுகள் கமாஸ் இயக்கத்துக்கு ஆதரவளிக்கும். ஈரான் ஆயுதங்களை வழங்கும் சாத்தியங்களும் உண்டு.

ஆனாலும் இஸ்ரேல் பலஸ்தீனத்துக்கு அழிவுகளை ஏற்படுத்தும். குறிப்பாக இன அழிப்பு போரின் தொடர்ச்சியாக இது மாறாலாம். ஏற்கனவே இஸ்ரேல் இன அழப்புப் போரைத் தான் நடத்தியிருந்தது.

அந்த இன அழிப்புப் போர் உச்சம் தொட்டுப் பலஸ்தீனியர்களுக்கு நியாயம் கிடைக்கவிருந்த போது தான் 1992 இல் நோர்வே சமாதானப் பணியில் ஈடுபட்டு யாசீர் அரபாத்தைக் கட்டிப்போட்டது. 1994 இல் அமைதிக்கான நோபல் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது.


ஆனால் 1987 இல் ஆரம்பிக்கப்பட்ட கமாஸ் இயக்கம் தமது நிலைப்பாட்டில் இருந்து மாறாது தொடர்ந்து போராட்டம் நடத்தியிருந்து.

பலஸ்தீனியர்களின் நிலைப்பாடு நியாயமானது என்று தெரிந்தும் இன்று வரையும் அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் இஸ்ரேல் அரசின் பலஸ்தீன இன அழிப்பைக் கண்டு கொள்ளாது, வெறுமனே கமாஸ் இயக்கத்தைப் பயங்கரவாதமாகச் சித்தரித்து வருகின்றன.

பலஸ்த்தீனம் மற்றும் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையும் அதன் கீழ் செயற்படும் ஜெனீவா மனித உரிமைச் சபை மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையும் அமெரிக்கா போன்ற நாடுகளின் நலன் சார்ந்தே செயற்படுகின்றன. இதற்குள் இந்தியாவும் புகுந்துகொண்டு தமக்குரிய புவிசார் அரசியல் பொருளாதார நோக்கில் லாபங்களைப் பெறுகிறது.

2006 இல் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்காட்டர் தலைமையில் பலஸ்தீனத்தில் நடத்தப்பட்ட தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் கமாஸ் இயக்கத்துக்கு பலஸ்தீனம் சார்பில் ஐ.நா

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
-அ.நிக்ஸன்-



சபையில் பார்வையாளர் அந்தஸ்து பதினொரு வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது.

ஆனால் கமாஸ் இயக்கத்தின் இராணுவக் கட்டமைப்பை அமெரிக்கா பயங்கரவாத பட்டடியலிலேயே தொடர்ந்தும் வைத்திருக்கிறது. இதனால் இந்தியாவும் கமாஸின் இராணுவக் கட்டமைப்பைப் பயங்கரவாதமாகவே பார்க்கிறது.

இந்த நிலையில் டொனால்ட் ட்ரமப் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது ஜெரிசலேம் நகரில் இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகத்தை அமைத்திருந்தார். அன்று ட்ரம்ப் மேற்கொண்ட அணுகுமுறையைத் தான் அமெரிக்காவின் பைடன் நிர்வாகம் இஸ்ரேல் அரசுடன் இன்றும் பேணி வருகின்றது.

ஆகவே அரசுக்கு அரசு என்ற அணுகுமுறையைத் தான் வல்லரசு நாடுகள் கையாளும் என்பதை இது உணர்த்துகிறது. ஆனால் விடுதலை கோரிப் போராடும் கமாஸ் போன்ற இயக்கங்கள் மரபுவழி இராணுவக் கட்டமைப்புடன் சுயமாக வளர்ந்து வருவதை வல்லரசு நாடுகள் ஏற்றுக்கொள்ளாது. இதற்கு 2009 முள்ளிவாய்க்கால் போர், சா்வதேச போர் விதிகளுக்கு மாறாக நடத்தப்பட்டு முடிவுறுத்தப்பட்டமை உதாரணமாகும்.

அந்த உதாரணங்கள் மூடி மறைக்கப்பட்டு 'விடுதலைப் புலிகள் அனுசரித்துப் போகவில்லை' 'சந்தர்ப்பங்களைத் தவறிவிட்டனர்' 'தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடவில்லை' என்று பல கதைகளைத் தெரிவு செய்து ஈழப் போரை மலினப்படுத்தும் விமர்சனங்கள் இன்று வரை கட்டவிழ்த்து விடப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

வடக்குக் கிழக்கில் 2009 இற்குப் பின்னர் சாதி, மத மற்றும் பிரதேச வேறுபாடுகள் தூண்டிவிடப்பட்டுப் போராட்டத்தையும் போரடிய தமிழ்ச் சமூகத்தையும் கொச்சைப்படுத்தும் விமர்சனங்கள் வேண்டுமென்றே விரிவாக்கம் செய்யப்படுகின்றன. அதற்குச் சில தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் என்று சொல்லப்படுவோரும் காரணமாகவுள்ளனர்.

சர்வதேச அங்கீகாரமற்ற விடுதலை இயக்கங்களின் இராணுவச் செயற்பாடுகளில் தீவிரத்தன்மை இருக்கும். அதன் அரசியல் கட்டமைப்புகள் இறுக்கமாகவும் இருக்கும். ஜனநாயகம் வேறொரு வகிபாகத்தில் கட்டமைக்கப்பட்டிருக்கும்.

ஆனால் அரசு என்ற அந்தஸ்த்தைப் பெற்ற அரசுகளும் அதன் இராணுவக் கட்டமைப்புகளும் தேவையானபோது ஜனநாயக (22ம் பக்கம் பார்க்க)

# சீனாவுக்கான அனுமதியும் இந்தியாவின் எச்சரிக்கையும்

சீனாவின் ஷி யான் 6 என்ற ஆய்வுக் கப்பலுக்கு, இலங்கை அரசாங்கம் அனுமதி அளித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிவித்துள்ள நிலையில், இந்தியப் பெருங்கடல் விளிம்பு நாடுகளின் அமைச்சர்கள் மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஒரு எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

அடுத்த மாதம் (நவம்பர்) 25ஆம் திகதி ஷி யான் 6 ஆய்வுக் கப்பல், இலங்கைக்கு வருவதற்கும் 10 நாட்கள் கடல் ஆய்வில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி செவ்வியொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

அவர் இதனை அறிவிப்பதற்கு முன்னதாகவே, கொழும்பில் உள்ள சீனத் தூதரகம், ஷியான் 6 ஆய்வுக்கப்பலை வரவேற்கும் நிகழ்வில் பங்கேற்குமாறு அழைப்பிதழ்களை அனுப்பும் பணியைத் தொடங்கி விட்டது. இந்த மாதம் 25ஆம் திகதி சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவதற்குத் திட்டமிட்டிருந்தது.

ஆனால் இந்தக் கப்பலை அனுமதிக்க கூடாது என்று இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. இதனால் முடிவு எதையும் எடுக்க முடியாமல் நீண்ட இழுபறி காணப்பட்டது.

இந்தியா, அமெரிக்காவின் அழுத்தங்களைப் புறக்கணிக்கவும் முடியாமல், சீனாவின் கோரிக்கையை உதாசீனம் செய்யவும் முடியாமல் அரசாங்கம் திணறியது.

இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுத்துவதற்கு அனுமதியோம் என்று அண்மையில் புதுடெல்லி சென்றிருந்த போதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி அளித்திருந்தார். அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்குப் பயணமாக வேண்டிய நிலையிலும், சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டிய நிலையிலும், முதலீடுகள் குறித்து பேச வேண்டிய நிலையிலும் அரசாங்கம் இருந்தது.

இந்த இரண்டு தரப்பு நிலைப்பாடுகளையும் சமாளிக்க அரசாங்கம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருக்கிறது. இதனை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியே வெளிப்படுத்தியிருக்கிறார்.

பல தரப்புகளில் இருந்தும் அழுத்தங்கள் இருப்பதை மறுக்க முடியாது. புவிசார் அரசியலைப் பொறுத்தவரை இது ஒரு சிக்கலான விடயம். இந்த அழுத்தங்களைச் சமாளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். பெரும் வல்லரசுகளுக்கு இடையே முரண்பாடுகள் உள்ள நிலையில் இந்தியப் பெருங்கடலில் மூலோபாய இடத்தில் அமைந்துள்ள இலங்கை, எல்லாவற்றையும் சமநிலைப்படுத்த வேண்டும். இது இலகுவானது அல்ல என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

அழுத்தங்களை எதிர்கொண்ட போதும், நாம் அவை அனைத்தையும் வெளிப்படுத்த முடியாது. சீனா நெருங்கிய நண்பன். எக்காரணம் கொண்டும் சீனாவிடம் பாரபட்சம் காட்டமாட்டோம். இந்தியாவும் எங்களுக்கு முக்கியம். மேற்கு நாடுகளும் எமக்கு முக்கியம்'' என்றும் அலி சப்ரி கூறியிருந்தார்.

எந்த தரப்புகளுடனும் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளாமல், இந்த விவகாரத்தை தீர்த்துக் கொள்ளவே அரசாங்கம் முற்பட்டது. முதல் கட்டமாக சீனா எதிர் பார்த்தபடி, ஒக்டோபர் 25ஆம் திகதி கப்பலை அனுமதிக்கவில்லை. நவம்பருக்கு அந்தப் பயணத்தை பிற்போடும்படி அறிவித்தது. இதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகளை கவனத்தில் எடுத்துக் கொண்டதாக காட்டிக் கொண்டது. அதேவேளை, சீன ஆய்வுக் கப்பலின் வருகையை நிராகரிக்கும் கடினமான முடிவையும் எடுக்கவில்லை. அந்தக் கப்பலை ஒரு மாதம் கழித்து வருவதற்கு அனுமதி கொடுத்தது. 4.2 பில்லியன் கடன் மறுசீரமைப்புக்கு சீனா இணங்குவதற்கு, இந்தக் கப்பல் விவகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டதாகவும் தெரிகிறது. எவ்வாறாயினும், சீனாவையும், இந்தியாவையும் சமாளித்து விட்டதாக அரசாங்கம் தற்போது கருதுகிறது. ஆனால், சீன ஆய்வுக் கப்பல் பிரச்சினையை தீர்ந்து விட்ட ஒன்றாக கருத முடியாது. அது இனிமேல் தான் தீவிரமடையப் போகிறது. இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய் சங்கர் கொழும்பில் இந்தியப் பெருங்கடல் விளிம்பு நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய போது, விடுத்திருந்த எச்சரிக்கையே இந்தச் சிக்கலின் தார்ப்பரியத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.



அவர் தனது உரையில், இந்தியப் பெருங் கடல் வெறுமனே ஒரு நீர்ப் பரப்பு மட்டுமல்ல, இந்தப் பிராந்தியத்திலும், அதற்கு அப்பாலுள்ள நாடுகளினதும் அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்தில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ள ஒரு பொருளாதார இராஜதந்திர வலயம் என்று திட்டவட்டமாக கூறியிருக்கிறார்.

சீனா தனது ஆய்வுக் கப்பல்களை நீர்ப்பரப்பு ஆய்வு என்ற பெயரிலேயே இந்தியப் பெருங்கடலுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது. இதனையே மறைமுகமாக, வெறும் நீர்ப்பரப்பு இல்லை, இது ஒரு பொருளாதார இராஜதந்திர வலயம் என்று ஜெய்சங்கர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்தியப் பெருங்கடலுக்குள் குறிப்பாக இந்தியாவை அண்டிய பகுதிகளில் சீன ஆய்வுக் கப்பல்கள் நீர்ப்பரப்பு ஆய்வு என்ற பெயரில் முக்கியமான தரவுகளைச் சேகரிப்பதாக இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் சந்தேகிக்கின்றன. அமெரிக்காவை விடவும் அதிகமான ஆய்வுக் கப்பல்களை சீனா இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் பணியில் ஈடுபடுத்தியிருக்கிறது.

இந்த ஆய்வுக் கப்பல்கள் நீர் மேற்பரப்பு ஆய்வுகளை மேற்கொள்வதுடன், கடலுக்கு அடியிலான நீரோட்டங்கள் மற்றும் தன்மைகள் குறித்தும் தரவுகளைச் சேகரிக்கின்றன. இந்த தரவுகள் சீனாவின் நீர்மூழ்கி கப்பல்களின் பயணங்களுக்கு முக்கியமானவை.

அது தவிர இந்தியாவின் பாதுகாப்புக் கேந்திரங்களையும், இந்த ஆய்வுக் கப்பல்களால் கண்காணிக்கவும், உளவு பார்க்கவும் முடியும் என்று இந்திய பாதுகாப்பு வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இதனைக் கவனத்தில் கொண்டு தான், சீன ஆய்வுக் கப்பல்களை இலங்கையின் துறைமுகங்களுக்கோ, இலங்கையின் பொருளாதார கடல் எல்லைக்குள் ஆய்வுகளை மேற் கொள்வதற்கோ அனுமதிக்க கூடாது என்று இந்தியா அழுத்தங்களைப் பிரயோகித்தது. சீனாவுக்கும் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கும் இடையே ஒரு பெரிய அதிகாரப் போட்டி நிலவுகிறது. நிறைய சந்தேகங்கள் உள்ளன. மற்ற நாடுகள் தங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதாக அவர்கள் கவலைப்படுகிறார்கள். இவை எதிலும் நாங்கள் ஈடுபட விரும்பவில்லை.'' என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது செவ்வியில் குறிப்பிட்டிருந்தார். இலங்கை விரும்பினாலும் சரி விரும்பாது போனாலும் சரி இந்த அதிகாரப் போட்டிக்குள் இருந்து விலகி நிற்க முடியாது. நாராவுடன் இணைந்து சீன ஆய்வுக் கப்பல் சேகரிக்கும் தரவுகள் இலங்கை அரசாங்கத்துக்கே சொந்தமாக இருக்கும் என்று அலி சப்ரி குறிப்பிட்டிருந்தாலும், சீனா அந்த தரவுகளை தனது பாதுகாப்புத் தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் இருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இவ்வாறான நிலையில் இந்தியா தனது பாதுகாப்புக் குறித்து கரிசனை கொள்வதில் ஆச்சரியம் இல்லை. சீன கப்பலுக்கு அனுமதி அளிக்கப்பட்டமை இந்தியாவுக்கு அதிருப்தி ஏற்படுத்தியிருக்கலாம்.

அதனை பிரதிபலிக்கும் வகையில் தான் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இந்தியப் பெருங்கடல் வெறும் நீர்ப்பரப்பு மட்டுமல்ல பல நாடுகளின் அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்துடன் தொடர்புடைய பொருளாதார இராஜதந்திர வலயம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறான நிலையில் தான் அவர், ஐ.நா. கடல் சட்ட பிரகடனத்தின் அடிப்படையில், இந்தியப் பெருங்கடல் சுதந்திரமான, திறந்த மற்றும் வெளிப்படையான இடமாக மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

அத்துடன், மறைமுக நிகழ்ச்சி நிரல்கள், நடைமுறைப்படுத்த முடியாத திட்டங்கள், தாங்க முடியாத கடன் சுமை போன்ற

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



ஆபத்துகள் எங்கே இருக்கின்றன என்பதில் உறுப்பு நாடுகள் தெளிவாக இருக்க வேண்டும் என்றும் ஜெய்சங்கர் மறைமுகமாக எச்சரித்திருக்கிறார். அவரது இந்த எச்சரிக்கை சீனாவை மையப்படுத்தியது தான்.

மறைமுக நிகழ்ச்சி நிரலுடன் சீனா இலங்கையில் தலையிடுவதாக, நடைமுறைச் சாத்தியமற்ற திட்டங்களுக்கு கடன்களை வழங்கி, தாங்க முடியாத கடன் சுமைக்குள் நாட்டை தள்ளுவதாக குற்றச்சாட்டுகள் இருந்து வருகின்றன.

சீனாவிடம் கடன் பெற்றதால் தான், அதன் கோரிக்கைகளை நிராகரிக்க முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது. இப்போதும், கடன் மறுசீரமைப்பு உடன்பாட்டுக்காக, சீன ஆய்வுக்கப்பலுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விடயத்தில் பிராந்திய நாடுகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று ஜெய்சங்கர் வலியுறுத்தியிருப்பது, இலங்கைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு மறைமுகமான செய்தி தான்.

ஷி யான் 6 ஆய்வுக் கப்பல் விவகாரம் முடிவுக்கு வந்து விடவில்லை என்பதையே ஜெய்சங்கர் சூசகமாக குறிப்பிட்டிருக்கிறார். இதனை அரசாங்கம் புரிந்து கொள்ளத் தவறினால் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும்.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இந்தியாவின் சுற்றி வளைப்புக்குள் தென்னிலங்கை அரசியல் அகப்படுமா?

இலங்கை அரசியல் வரலாறு முழுவதும் இந்தியா இன்றியமையாத புவிசார் அரசியல் பெறுமானத்தைக் கொண்டுள்ளது. அதனால் இலங்கையும் இந்தியாவும் அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியில் இயங்கும் சக்திகளாக விளங்குகின்றன.

இந்தியாவின் நலனுக்குள் இலங்கையின் இருப்பும் இலங்கையின் பாதுகாப்புக்குள் இந்தியாவின் தனித்துவமும் கொண்ட அரசியல் தவிர்க்க முடியாததாகவுள்ளது. இத்தகைய புவிசார் நியதி இரு நாடுகளையும் அதன் காலாசார மரபுகளையும் நெருக்கமானதாக கட்டமைத்துள்ளது.

இரு நாடுகளும் அதன் ஆட்சியாளர்களும் மக்களும் தமக்கிடையிலான உறவை புரிந்துணர்வுடன் வைத்துக் கொள்ள தவறுகின்ற போதெல்லாம் இரு நாடுகளும் முரண்பாட்டை எதிர் கொண்டிருப்பதுடன், இராஜதந்திர ரீதியில் முறுகல் நிலையை எதிர் கொள்வதை கண்டு கொள்ள முடிகிறது. இக்கட்டுரையானது இந்தியாவின் வெளியுறவு அமைச்சரது இலங்கை வருகை பால் ஏற்பட்டுள்ள அரசியல் நிலையினை தேடுவதாக உள்ளது.

இலங்கையில் இந்து சமுத்திர விழிம்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கான மகாநாடு (10-12 ஆம் திகதி வரை) நடைபெற்றுள்ளது. 23 நாடுகளைக் கொண்ட இவ்வமைப்பின் 23 ஆவது கூட்டத் தொடர் கொழும்பில் நிகழ்ந்து வந்தது.. அடுத்த இரு ஆண்டுகள் இலங்கையின் தலைமையில் செயல்படவுள்ள இந்து சமுத்திர விழிம்பு நாடுகளின் அரசியல் இந்திய, சீனா மட்டுமல்லாது மேற்கு நாடுகளுக்கும் முக்கியமானதாக உள்ளது. இத்தகைய மகாநாட்டிற்கு வருகை கதந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கையுடன் 3 அபிவிருத்தித் திட்டங்களின் உடன்பாடுகளில் கைச்சாத்திட்டதுடன், இலங்கை ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் மற்றும் ஜனாதிபதியின் பிரதானியையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

அது மட்டுமன்றி நிகழ்நிலையில் மலையகத்தில் இந்திய கடன் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் திட்டத்தினை திறந்து வைத்துள்ளார். இந்திய அனுசரணையுடன் 10.000 வீடுகளை நிர்மாணிக்கும் முன்முயற்சியில் இத்தகைய நடவடிக்கையை ஜெய்சங்கர் ஆரம்பித்துள்னார். இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரரின் உதவியுடன் முன்னெடுக்கும் 9 திட்டங்களை விரைவில் நிறைவு செய்வதற்கான மேலதிக நிதியினை வழங்குவதற்கான உடன்பாட்டிலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கையெழுத்திட்டுள்ளார்.

அதேநேரம் இந்திய வெளியுறவு அமைச்சர் 12 ஆம் திகதி இந்தியா திரும்பியுள்ளதாகவும் இலங்கையில் இந்திய வெளியுறவு அமைச்சர் திட்டமிட்ட விடயங்கள், விஜயம் செய்ய தீர்மானித்த விடயங்கள் பல கை விடப்பட்டதாகவும் செய்திகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

ஆனால் இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்தபோதே இரு நாட்டுக்குமான இராஜதந்திர உரசல் ஏற்பட ஆரம்பித்திருந்தது. குறிப்பாக ஜெய்சங்கரை வரவேற்பதற்காக இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் சென்றிருந்தமை அதிக விமர்சனத்தை ஏற்படுத்தியது. இலங்கையின் உயர்கல்வி அமைச்சருடன் ,இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சென்றிருந்தமை வழமையான தூதரக நடவடிக்கை என்பதில் குழப்பம் கிடையாது. ஆனால் இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் வருகை தரும் போது அதற்கு பதிலீடான (Counterpart) இலங்கையின் வெளியுறவு அமைச்சர் அல்லது சமதையான பாதுகாப்பு அமைச்சராக இருத்தல் வேண்டும் என்பது இராஜதந்திர சம்பிரதாயமாகவுள்ளது. ஆனால் அதனை இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை என்பது பரவலாக அதிருப்தியை தந்துள்ளது. அவ்வாறே திருகோணமலைக்கு ஜெய்சங்கள் மேற்கொள்ளவிருந்த பயணமும் கைவிடப்பட்டமை பிரதான அரசியலாக உரையாடப்படுகிறது. இதேபோன்றே ,ந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங்கின் வருகையும் திட்டமிடப்பட்ட பின்னர் கைவிடப்பட்டமை கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்திற்குப் பின்னர் ஏற்பட்ட சம்பவங்கள் இந்தியாவுக்கு அதிருப்தியானவையாகவே தெரிகிறது. ஆனால் இதுபோன்று பல சம்பவங்கள் இந்தியத் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது என்பதையும் நினைவில் கொள்வது அவசியமானது. இவ்வாறு இலங்கை இந்தியாவின் பொருளாதார உதவிகளையும் பெற்றுக் கொண்டு இராஜதந்திர ரீதியில் உரசல்களையும் ஏன் முதன்மைப் படுத்துகிறது என்பது இயல்பான கேள்வியாகும். அதனை விரிவாக நோக்குவது அவசியமானது.



முதலாவது, பொருளாதார உதவியை அதிகம் வழங்கிய இந்தியா இலங்கை அரசியலில் அதிகமான ஈடுபாட்டை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது. குறிப்பாக மலையகத்திலும் வடக்கு, கிழக்கிலும் இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. குறிப்பாக ஆர்.எஸ்.எஸ். இன் ஈடுபாடு இலங்கையில் அதிகரித்துள்ளதாக தெரிய வருகிறது. மலையகத்திலேயே அதிகமான செல்வாக்கை உருவாக்கும் விதத்தில் ஆர்.எஸ்.எஸ். பிரிவுகள் இந்துத்துவ அரசியலை ஏற்படுத்தி வருவதாக குற்றச்சாட்டுகள் உண்டு.

இவ்வாறு இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் இந்தியாவின் செல்வாக்கு வளர்ந்து வருகிறது. அதனால் இலங்கையின் உள்நாட்டு அரசியலும் பௌத்த மதத்தின் அரச இயந்திரமும் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா இலங்கை மீது ஆதிக்கத்தை மேற்கொள்ளும் என்பதற்காகவே ஈழத்தமிழர் மீதான அடக்குமுறையை தென்னிலங்கை மேற்கொள்வதாக வரலாற்று ஆய்வுகள் பல உறுதிப்படுத்துகின்றன.

இது பற்றி மூத்த வரலாற்று ஆசிரியரும் அரசியல் ஆய்வாளருமான மு.திருநாவுக்கரசு தனது ஆய்வு நூல்கள் பலவற்றில் தெளிவுபடுத்தியுள்ளார். இது தொடர்பில் மீளவும் ஒரு அச்சம் தென் இலங்கை அரசிடமும் பௌத்த மகா சங்கங்களிடமும் ஏற்பட்டுள்ளது. அதன் பிரதிபலிப்பாகவே மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள மேய்ச்சல் தரை விவகாரமும் வடக்கு, கிழக்கு மீதான விகாரை அரசியலும் அமைந்துள்ளது. இத்தகைய தீவிர தேரவாத பௌத்தம் ஈழத்தமிழர் மீது இன வன்முறையை உருவாக்க திட்டமிடுவதாக கூறப்படுகிறது.

இது மீளவும் இந்தியாவுக்காக ஈழத்தமிழர் வன்முறைக்கு உள்ளாக்கப்படப் போகிறார்கள் என்ற சந்தேகத்தை தந்துள்னது. அதற்கான புறச்சூழல் கட்டமைக்கப்படுவதாகவே தெரிகிறது. அது குருந்தூர் மலையில் தொடங்கி படிப்படியாக வளர்ந்து செல்கிறது. பொருளாதார நெருக்கடி ஒருபுறம் அமையும் போது மறுபக்கத்தில் தீவிர தேரவாதபௌத்தத்தின் ஈழத்தமிழர் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கை நிகழ்ந்து கொண்டு வருகிறது. இரண்டுமே ஈழத்தமிழருக்கு ஆரோக்கியமானதாக தெரியவில்லை.

இரண்டு, சீனாவின் ஆய்வுக்கப்பலான ஷியான்-6 கப்பலுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை அறிவித்துள்ளது. அதனை உறுதிப்படுத்திய இலங்கையின் வெளியுறவு அமைச்சர் அலிசப்ரி சீனாவின் உறவு இலங்கைக்கு முக்கியமானது எனக் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் (2022) 17 இல் சீனாவின் யுவான்-வாங்-5 உளவுக் கப்பலின் வருகையின் போதும் இந்தியா இலங்கையிடையே அதிக இராஜதந்திர முறுகல் நிலவியது. அப்போது இலங்கை எத்தகைய உத்தியைக் கையாண்டதோ அதே உத்தியை மீளவும் முதன்மைப்படுத்தியுள்ளது. சீனாவுக்கும் இலங்கைக்குமான நெருக்கம் இந்தியாவுடனான விரிசலை ஏற்படுத்தி வருகிறது. இது பற்றிய விவாதங்கள் உரையாடல்கள் ஆய்வுகள் பல வெளியாகியும் இந்தியத் தரப்பு அவை எதனையும் கண்டு கொள்ளாத போக்கு நிலவுவதாக இந்தியத் தரப்பு மீது குற்றச்சாட்டு நிலவுகிறது. ஆனால் இந்தியாவின் அண்மைய போக்குகள் அதிகவேறுபாடான நிலைமையை நோக்கி இந்தியா நகரத்திட்டமிடுவதாகவே தெரிகிறது. குறிப்பாக கனடாவுக்கும் இந்தியாவுக்குமான ,ராஜ

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



தந்திர முரண்பாட்டுக்கான அடிப்படை மற்றும் இஸ்ரேல் - ஹமாஸ் போரில் இந்தியா இஸ்ரேலை ஆதரிப்பதாக வெளிப்படையாக அறிவித்தமை மற்றும் இந்திய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமிர்ஷாவின் இனப்படுகொலை பற்றிய அறிவிப்பு என்பன இந்தியாவின் போக்கில் மாற்றத்தை கோடிட்டுக் காட்டுகிறது. இது இலங்கைத்தீவுக்கு எத்தகைய விளைவை தரப் போகிறது என்பதே முக்கியமானது. இதனான் ஈழத்தமிழரோ தென்னினங்கையோ பயனை அடையப் போகிறது என்பதே குழப்பமாகவே தெரிகிறது. இதன் நீட்சியாக இந்தியாவின் முன் முயற்சியில் இலங்கையிலுள்ள அனைத்து தூதராலயங்களின் தூதுவர்களுடனும் ஒரு கலந்துரையாடலை இந்தியா மேற்கொள்ள திட்டமிடுவதாக உறுதிப்படுத்தாத தகவல்கள் வெளியாகியுள்ளது. இதன் உண்மைத்தன்மை உறுதிப்படுத்த முடியவில்லை.

மூன்றாவது நாகப்பட்டின - காங்கேசன் துறை கப்பல் சேவை நீண்ட இழுபறிக்குள் உள்ளாவது அதிக குழப்பத்தை தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இந்தியத் தரப்புக்கும் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய இழுபறிக்குள்ளேயே சொகுசுக் கப்பலது வருகை இலங்கைத்தீவை நோக்கி இந்தியா மேற்கொண்டது. அதன் நகர்வு முழுவதும் கொழும்பை மையப்படுத்தி அமைந்ததோடு புதுடில்லி-கொழும்பு உறவை சார்ந்ததாக அமைந்திருந்தது.

(22ம் பக்கம் பபார்க்க)

Friends MATRIMONY
உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...
10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்!
10,000+
இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.

கனடாவில் வசிக்கும் வயது 27, (Single) Hindu, வேளாளர், Bachelor Degree, வரை படித்த மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 120288)
கனடாவில் வசிக்கும் வயது 31 வயது, வேளாளர், Catholic, Technology Analyst, Bachelor Degree, வரை படித்த மணமகன்களுக்கு Single பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 120305) (FMID 120315)
கனடாவில் வசிக்கும் 25 வயது முதல் 65 வயது வரையான (Catholic / Christian) High School, Diploma, Bachelor Degree, Master Degree, PHD, வரை படித்த மணமகன்களுக்கு (Single / Divorced / Annulled ) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம்.
+1 647 709 1761
+1 647 709 1536
+1 416 477 2259
+1 416 477 6854
GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
friendsmatrimonym@gmail.com
Mon to Fri 11AM to 6PM
Sat 12PM to 6PM
www.friendsmatrimony.com

# வளர்ப்பு நாய்களுக்கு முத்தம் கொடுப்பதால் ஏற்படும் ஆபத்துக்கள்



இன்று பலரது வீடுகளில் குழந்தைகளுக்கு நிகரான இடத்தை நாய்களும் பெற்றுள்ளன. மக்களுக்கு நாய் வளர்ப்பதன் மீதுள்ள ஆர்வத்தால் நாய்களுக்கான விற்பனையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்நிலையில் உரிய வழிகாட்டல் இல்லாததால், நாய் வளர்ப்பவர்கள் அவற்றை முத்தமிடுவது, மடியில் வைத்துக் கொஞ்சுவது, கட்டிப் பிடித்துக் கொள்வது போன்ற செயல்களைச் செய்கின்றனர். மேலும் நாய்களுக்கு உரிய பயிற்சி அளிக்காமலும் விட்டு விடுகின்றனர். இதனால் விலங்குகளிடமிருந்து மனிதருக்குப் பரவும் விலங்கியல் (Zoonotic) நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். சமீபத்தில் பரவிய நிபா வைரஸும் வெளவால்கள் வழியாக மனிதனுக்குப் பரவும் நோய்க்கான ஓர் உதாரணம்.

குழந்தைகள் முதல் பெரியவர் வரை தங்களது வளர்ப்பு நாய்களை கொஞ்சி முத்தமிட்டு வருகின்றனர். நாய்களை முத்தமிடுவது பாதுகாப்பானதா, அதனால் நோய்கள் ஏற்படுமா எனப் பல தரப்பட்ட கேள்விகளும் உங்களுக்கு எழலாம்.

### நாய்கள் ஏன் நம்மை நக்குகின்றன?

நாய்கள் ஏன் நம்மை நக்குகின்றன என்பதைப் பற்றி அறிய கோவையைச் சேர்ந்த நாய் நடத்தையியல் நிபுணர் ஸ்ரீதேவியிடம் பேசிய போது பொதுவாக மோப்பமிடுவது, வாலை ஆட்டுவது, குரைப்பது போன்றவை நாய்களின் இயல்பான மொழி. மனிதனாக இருந்தாலும், வேறு உயிரினமாக இருந்தாலும் அவை இந்தச் செயல்களின் மூலமே தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன என்கிறார் அவர்.

இதில் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நமது முகம், அக்குள், அந்தரங்கப் பகுதி ஆகியவற்றை மோப்பம் பிடிப்பதால் நாய்கள் நம்மைப் பற்றிய பல தகவல்களைப் பெறுகின்றன. என்ன சாப்பிட்டோம், எங்கு சென்று வந்தோம், என்ன மனநிலையில் இருக்கிறோம் போன்றவற்றைக் கூட அவற்றால் உணர முடியும், என்கிறார் ஸ்ரீதேவி. மேலும் பேசிய அவர், ஒரு நாய் மற்றொரு நாயைப் பார்த்தால் தன் மொழியில் உரையாடும். அவற்றின் உடல் பாகங்களை நக்குவது, விளையாட்டாகக் கடிப்பது போலத் தான் நம்மிடமும் அதீத அன்பின் வெளிப்படாக நம் முகத்தை நக்குகிறது. சில நேரங்களில் உங்கள் கவனத்தை ஈர்க்கும் விதமாகவும் முகம் மற்றும் கைகளை நக்கும் என்கிறார் ஸ்ரீதேவி.

### நாய்களுடன் எப்படி வழக வேண்டும்?

சரி, நீங்கள் வீட்டில் வளர்க்கும் நாய் உங்களை அதிகமாக நக்கிக் கொண்டே இருந்தால் அதை நிறுத்த என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து விளக்குகிறார் ஸ்ரீதேவி.

முதலில் நாய்கள் உங்கள் முகத்திற்கு அருகில் வரும்போது அதை ஊக்கப்படுத்தாதீர்கள். முத்தமிடுவதற்குப் பதிலாக அதனுடன் கை குலுக்குங்கள். அதனுடன் தொட்டு விளையாடும் போக்கை சிறுகச் சிறுகக் குறைக்க வேண்டும். ஆஸ்துமா மற்றும் மூச்சுத் திணறல் உள்ளவர்கள் நாய்களின் முடி உதிர்வதைப் பற்றிக் கவனமாக இருக்க வேண்டும்.

சிறு வயதிலிருந்தே அன்றாடம் இப்படித் தான் நடந்து கொள்ள வேண்டும் என அவற்றுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.


### நாய்களை முத்தமிடுவதால் நோய் பரவுமா?

நாய்களை முத்தமிடுவதால் மனிதர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படுமா என்பதைப் பற்றி அறிந்து கொள்ள, சென்னையைச் சேர்ந்த கால்நடை மருத்துவர் சங்கரிடம் பேசினோம். அவர் கூறுகையில், சில வீடுகளில் குழந்தைகள் இல்லை என்பதற்காக நாய்களைக் குழந்தையாகப் பாவிப்பதாகக் கூறுவார்கள். தங்கள் கூடவே படுக்கை முதல் சமையலறை வரை எடுத்துச் செல்வார்கள்.

ஆனால் நாய் ஒரு விலங்கு தான். நாய்களுக்கு என இருக்கும் சரியான வழிகாட்டல் படி அவற்றைப் பராமரிக்க வேண்டும் எனவும், அப்படிச் செய்யவில்லை என்றால் நோய்த் தொற்று ஏற்படும் எனவும் கூறினார். நாய்களின் பல் இடுக்குகளில் கிருமிகள் இருக்கும். எந்தவொரு நாய் உரிமையாளரும் தங்களது நாய்களுக்குத் தினமும் பல் துலக்கி விடுவது இல்லை. அப்படி துலக்கினாலும் நாய்களின் வாயில் கிருமிகள் அதிகம் இருக்கவே செய்யும், என்கிறார் அவர். அதனால் நாய்களை நம் உடலில் முத்தமிடவோ, நக்கவோ அனுமதிக்கக் கூடாது, அதேபோல் நாமும் அவற்றை முத்தமிடக் கூடாது என்கிறார் கால்நடை மருத்துவர் சங்கர்.

மேலும், நாய்களுக்கு குடல் புழுக்கள் அதிகமாக இருக்கும். அவற்றோடு பழகப் பழக நமக்கும் இந்தத் தாக்கம் ஏற்படக்கூடும். சருமம் தொடர்பான பல நோய்கள் ஏற்படக்கூடும் என்கிறார்.

நாய் போலவே, பூனை, குதிரை, பன்றி, எலி என மேலும் பல விலங்குகளில் இருந்து லெப்டோஸ்பீரோசிஸ் என்ற பாக்டீரியா பரவக் கூடும். இது விலங்குகளின் சிறுநீர் மற்றும் உமிழ்நீரால் பரவுகிறது. மனிதர்களின் மூக்கு, வாய், கண்கள் மற்றும் தோலில் காயங்கள் ஏதேனும் இருந்தால் அதன் மூலம் மனிதர்களுக்கும் பரவும். (21ம் பக்கம் பார்க்க)





# யாழ்.பல்கலைக்கழக தரையிறக்க முயற்சி! இந்திய அமைதிப்படை அதிகாரி கல்கட்டின் அனுபவம் இன்றும் பேச வைக்கிறது!

யாழ்பல்கலைகழகத்தில் இந்திய இராணுவத்தினரின் தரையிறக்க நடவடிக்கை இடம்பெற்று பல வருடங்களாகின்றது. இதன் போது 29 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நான் அவ்வேளை மெட்ராசில் இருந்தேன் (சென்னை) அவ்வேளை எனக்கு இராணுவ அதிகாரி லெப்ஜெனரல் டெபின்டர் சிங்கிடமிருந்து அழைப்பு வந்தது இலங்கைக்கு விரைவாக சென்று பொறுப்பேற்குமாறு அவர் உத்தரவிட்டார்.

மோதலில் படையினரை இழப்பது என்பது எங்களிற்கு பயங்கரமான கனவு - சிறந்த திட்டமிடல் காரணமாக அந்த இழப்பினை தவிர்த்திருக்கலாம் என்கின்ற போது அது மேலும் கடினமான விடயமாக காணப்படும்.

சில மணி நேரங்களில் நான் பலாலி விமான தளத்தில் தரையிறங்கினேன் நடவடிக்கைகளை பொறுப்பேற்றேன்.

உயிர் தப்பியவர்களை காப்பாற்றுவதும் யாழ் பல்கலைகழக பகுதிக்குள் சிக்குண்டுள்ளவர்களை மீட்பதுமே எனது முன்னுரிமைக்குரிய விடயமாக காணப்பட்டது.

1987ம் ஆண்டு ஒக்டோபர் 12 ம் திகதி இரவு தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ் பல்கலைகழகத்தை தங்கள் தலைமையகமாக பயன்படுத்துகின்றனர் எனவும் அந்த அமைப்பின் தலைமையின் சந்திப்பொன்று அங்கு இடம் பெறவுள்ளது எனவும் இந்திய அமைதிப்படைக்கு பொறுப்பான ஜெனரலிற்கு தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை கைதுசெய்வதற்காக இந்திய இராணுவம் நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவுள்ளது ஹெலியை பயன்படுத்தி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் என்பது விடுதலைப்புலிகளிற்கு முன்னரே தெரிந்திருந்தது.

விடுதலைப்புலிகள் கட்டிடத்தின் மேல் தளத்தில் காத்திருக்க இந்திய இராணுவத்தினர் பொறிக்குள் சிக்குப்பட்டனர்- விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

மோசமான திட்டமிடலிற்கு அப்பால் இந்திய அமைதிப்படையின் இந்த நடவடிக்கை அடிப்படை தவறுகளை கொண்டிருந்தது ஹெலிமூலம் தரையிறக்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன்னர் தரையிறங்குவதற்கான பாதுகாப்பான இடமொன்றை அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வரவில்லை.

ஆகவே எனது முதல் உணர்வு என்பது சீற்றமாகவும் அர்த்தமற்ற உயிர் இழப்புகள் குறித்த வேதனையாகவும் காணப்பட்டது.

இதன் காரணமாக உயிர் தப்பியவர்களை காப்பாற்றுவதே எனது முன்னுரிமைக்குரிய விடயமாக காணப்பட்டது அவர்கள் இன்னமும் யாழ்பல்கலைகழகத்தில் சிக்குப்பட்ட நிலையில் காணப்பட்டனர்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதும் எனது முக்கிய நோக்கமாக காணப்பட்டது.

இந்தியாவில் நாடாளுமன்றத்தில் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கின்றது என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன. அழுத்தம் காணப்பட்டது.

பிரதமர் அலுவலகத்திலிருந்து ரொனென் சென் தொலைபேசி மூலம் என்னை தொடர்பு கொண்டார். இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி அமெரிக்கா செல்கின்றார் அமெரிக்க காங்கிரசில் உரையாற்றவுள்ளார் இந்த நிலையில் இலங்கையில் சிறிய எண்ணிக்கையிலான பயங்கரவாதிகளை இந்திய இராணுவத்தால் கையாள முடியாவிட்டால் அது மிகமோசமான விதத்தில் பார்க்கப்படும் என அவர் தெரிவித்தார்.

முன்னைய நடவடிக்கைகளின் தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது என்பது குறித்து நான் உறுதியாகயிருந்தேன் எனவே புலிகள் எதிர்பார்த்த ஒரு அணுகுமுறைக்கு பதில் நான் யாழ் நகரை இரண்டு பக்கத்திலிருந்து சுற்றி வளைக்கும் நடவடிக்கையொன்றை முன்னெடுக்க திட்டமிட்டேன்.

மேற்கு பகுதியிலிருந்து நகர்ந்த அணிக்கு பிரிகேடியர் மன்ஜிட் சிங் தலைமை தாங்கினார். கிழக்கு பக்கமாக நகர்ந்த அணிக்கு இன்னுமொரு பிரிகேடியர் தலைமை தாங்கினார்.

யாழ் நகரத்தின் ஊடாக இந்திய படையினரை அனுப்புவதை நான் தவிர்த்தேன் ஏனெனில் விடுதலைப்புலிகள் அங்கு தயாராகயிருந்தனர்- பல வீடுகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து எங்களை எதிர்கொள்ள தயாராகயிருந்தனர்.

யாழ்ப்பாணத்தின் வரைபடத்தை ஆராய்ந்த வேளை நகருக்கு சமாந்திரமாக புகையிரத பாதையொன்று செல்வதை அவதானிக்க முடிந்தது- மேஜர் அனில் கௌல் தனது டாங்கிகள் படைப்பிரிவை இந்த வழியாக நகர்த்தினர்இஅந்த பகுதியில் நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்ததை அவதானித்த அவர்கள் புகையிரத பாதைகள் ஊடாக நகர்ந்தனர்.

மோதலின் போது மேஜர் அனில் கௌல் தனது ஒரு கண்பார்வையை இழந்தார் அவருக்கு வீர் சக்ர வழங்கப்பட்டது பிரிகேடியர் மன்ஜிட் சிங்கிற்கு மகாவீர் சக்ர வழங்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து விடுதலைப்புலிகள் எங்கள் மீது மேற்கொண்ட இயந்திர துப்பாக்கி பிரயோகம் குறித்து நான் கவலை கொண்டிருந்தேன். அவ்வேளை யாழ்ப்பாணத்தில் அதுவே உயரமான கட்டிடம். எங்கள் படைவீரர்கள் மணிக்கூட்டு கோபுரத்தை சுற்றி வளைத்து அதற்குள் ஏறத்தொடங்கினர் அதேவேளை மேஜர் டிப்பி பிரார் யாழ்கோட்டையை அடைந்திருந்தார். அங்கிருந்து ஒரு ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டு மணிக்கூட்டு கோபுரத்தில் காணப்பட்ட இயந்திர துப்பாக்கியை அழித்தோம்.

யாழ்ப்பாணத்தின் முன்னரங்குகளில் தயாராகயிருந்த விடுதலைப்புலிகள் பக்கவாட்டிலிருந்தும் பின்பக்கத்திலிருந்தும் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை.

யாழ்பல்கலைகழகத்தில் சிக்குண்டிருந்த எங்களது படையினரை நாங்கள் மீட்டு உயிர் தப்பியவர்களை சென்னைக்கு அனுப்பி வைத்தோம்.

16 நாட்களின் பின்னர் யாழ்ப்பாணம் வீழ்ந்தது ஆனால் யாழ்ப்பாணத்திற்கான இந்திய அமைதிப்படையின் முதற்கட்ட சமர் இது. இன்று வரை யாழ்பல்கலைகழகத்தில் நாங்கள் தவிர்த்திருக்கக் கூடிய உயிரிழப்புகள் குறித்த கவலை எனக்குள்ளது.

# வளர்ப்பு நாய்களுக்கு முத்தம் கொடுப்பதால் ஏற்படும் ஆபத்து

தாக்கமாகக் காய்ச்சல், மஞ்சள் காமாலை, கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படக்கூடும். இதைக் கட்டுப்படுத்தும் விதமாக தடுப்பூ சிகள் போட்டுக்கொள்வது மிகவும் அவசியம். என்கிறார் மருத்துவர் சங்கர். தொற்றுகளுக்குப் பயந்து நாய்களோடு பழகாமல் இருப்பதும் தவறு. அதே நேரம் சுத்தமாகவும் இருக்க வேண்டும். என்கின்றனர் மருத்துவர்கள்.

### நாய் வாங்கும் முன் கற்றுக் கொள்ள வேண்டியவை

மேலும், ஒரு கட்டத்தில் நாய்கள் கண்டிப்பாக மனிதரின் துணையையும் அன்பையும் எதிர்பார்க்கும். அதனால் தொற்றுகளுக்குப் பயந்து அவற்றோடு பழகாமல் இருப்பதும் தவறு என்கிறார் கால்நடை மருத்துவர் சங்கர். அவற்றோடு விளையாட வேண்டும். அதேவேளையில் சுத்தமாகவும் இருக்க வேண்டும். என்கிறார் அவர்.

குறிப்பாக நாய்களை தங்கள் படுக்கை வரை அனுமதிக்கும் உரிமையாளர்கள் தங்கள் வீட்டில் உள்ள யாருக்கும் எந்த நோய் பாதிப்பும் ஏற்படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு பைக் வாங்கும் முன் பைக் ஓட்டக் கற்றுக்கொண்டுதான் வாங்குவோம். அதேபோல நாய் வளர்க்கும் முன்பு அதற்குத் தடுப்பூசி போடுவது, குளிப்பாட்டுவது, சீர்ப்படுத்துவது, நடை பயிற்சிக்கு அழைத்துச் செல்வது என அனைத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் மருத்துவர் சங்கர்.

### கிருமிகள் உண்ணிகளில் இருந்து எப்படி பாதுகாப்பது?

நாய்களைப் பாதுகாப்பாக வளர்க்கும் முறை பற்றிப் பேசிய கால்நடை மருத்துவர் சங்கர், நாய்களை பிறந்த உடனே அவற்றின் தாயிடமிருந்து எடுத்து வளர்க்கக்கூடாது, எனவும் அவை குறைந்தது 60 நாட்களாவது அவற்றின் தாயிடம் இருந்தால் தான் அவற்றுக்கு நோய் எதிர்ப்பு சக்தி பெருகும் எனவும் கூறினார். நாய்களின் எச்சில் நம் உடலில் எங்கும் படக்கூடாது. குறிப்பாக நம் உடலில் காயம் ஏற்பட்ட இடங்களில். வேறு எதாவது நோய் என்றால் நுண்ணுயிர்க் கொல்லிகளை வைத்து சரி செய்யலாம். ஆனால் ரேபீஸ் நோய்த் தொற்று ஏற்பட்டால் சரி செய்வது மிகவும் கடினம் என்றார்.


மேலும், நாய்களுக்குத் தடுப்பூசி போட்டு விட்டதால் ரேபீஸ் வராது என்று சொல்ல முடியாது, என்றார் அவர். ஏனெனில் ரேபீஸ்க்கு மூன்று வடிவங்கள் இருக்கின்றன. அதில் ஆக்டிவ் ரேபிஸ் அறிகுறிகள் வெளியில் தெரியும். டம்ப் (Dump) எனப்படும் வடிவம் வெளியில் தெரியாது. அந்த நாய்களுக்கு ரேபீஸ் இருப்பது அவ்வளவு எளிதாக வெளிப் படையாகத் தெரியாது என்றார். மேலும், நாய்களுக்குத் தடுப்பூசி போட்டு விட்டதால் ரேபீஸ் வராது என்று சொல்ல முடியாது. என்கின்றனர் மருத்துவர்கள்.

மேலும் தொடர்ந்த அவர். நாய் நம் கால்களில் கடித்தால் அந்த வைரஸ் தொற்று நரம்பு மண்டலத்தில் இருந்து நம் தலைக்கு ஏற ஒரு மாதமோ, இரண்டு மாதமோ, ஒரு வருடமோ கூட ஆகலாம். அதுவே கழுத்தில் கடித்தால் விளைவு உடனே தெரியும், என்கிறார்.


நாய்களுக்கு ஏற்படும் உண்ணித் தொற்றுகளைப் பற்றிப் பேசிய மருத்துவர் சங்கர், ஆண் உண்ணிகள் சிலந்தி போலவும், பெண் உண்ணிகள் வண்டு போலவும் இருக்கும் என்றார். ஆண் உண்ணிகள் நாய்களின் உடலிலேயே இருக்கும். ஆனால் பெண் உண்ணிகள் இனப்பெருக்கம் முடிந்தவுடன் நாய்களின் உடலில் இருந்து கீழே விழுந்து விடும். அவை வீட்டில் எங்காவது இடுக்குகளில் தங்கியிருக்கலாம். அவை மனிதர்களின் உடலில் ஏறினால் அது சரும பிரச்சனைகளுக்கும் நோய்த் தொற்றுக்கும் வழி வகுக்கும். என்றார்.

அதனால் நாய்களை வளர்க்கும் உரிமையாளர்கள் கண்டிப்பாக அதை முறையாகச் சீர்ப்படுத்த வேண்டும். அது மட்டுமின்றி, `வீட்டில் செல்லப் பிராணிகளை வைத்திருக்கும் உரிமையாளர்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கண்டிப்பாக அவற்றுக்குக் குடல் புழுக்களை அகற்ற மருத்துவம் செய்ய வேண்டும்.` என்றார் மருத்துவர் சங்கர். நன்றி:- பிபிசி


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எடுத்த காரியம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். எதிர்பாராத வீண் செலவு ஏற்படலாம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல், வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் போன்றவை உண்டாகலாம். உத்யோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகளை சந்திக்க நேரிடும்.





ரிஷபராசி அன்பர்களே! அடுத்தவர் குற்றச் சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள்.வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது





மிதுனராசி அன்பர்களே! கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பணத்தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயல்படுவது நல்லது. உத்யோகத்தில் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.




கடகராசி அன்பர்களே! பூமி, வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பாராதசெலவு உண்டாகலாம். தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும். உத்யோகஸ்தர்கள் அலுவலக பொறுப்புகளை கவனமாக செய்வது நல்லது. இயந்திரங்களில் பணி புரிபவர்கள், ஆயுதங்களை கையாள்பவர்கள் எச்சரிக்கையாக செயல்படுவது அவசியம்.





சிம்மராசி அன்பர்களே! கோபமான பேச்சு, டென்ஷன் குறையும் வாரம். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் பணியாளர்கள் மூலம் நன்மை கிடைக்கும். லாபம் கூடும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி அமைதியாவர்.




கன்னிராசி அன்பர்களே! வேலைபளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். கை, கால் வலி, உடல் சோர்வு உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்யோகத்தில் சக ஊழியர்கள், மேல திகாரிகளுடன் அனுசரித்து செல்வது நல்லது. சுமாரான வாரம்.





துலாம் ராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்யோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும்.





விருச்சிகராசி அன்பர்களே! காரியங்கள் தடைபட்டாலும் பின்னர் நன்றாக நடந்து முடியும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைபளு, கூடுதல் பொறு ப்புகள் உண்டாகலாம். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்னைகளும் சரியாகும்.








தனுராசி அன்பர்களே! தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும்.




மகரராசி அன்பர்களே! தேவையற்ற மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. குடும்பத்தினரின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தரும். தரும்.




கும்பராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தானதர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். உத்யோகத்தில் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.




மீனராசி அன்பர்களே! எல்லாவற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். லாபம் கூடும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும்,உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## இந்தியாவின் சுற்றி வளைப்புக்குள்

(19ம் பக்கத் தொடர்ச்சி) சீனக் கப்பல்களது வருகையை அங்கீகரிக்கும் அமைச்சரவை நாகப்பட்டின-காங்கேசன்துறை கப்பல் போக்குவரத்தை சாத்தியப்படுத்த முன் வராத நிலை காணப்படுகிறது. இதன் அரசியல் நோக்கத்தை முறியடிக்கவே இந்தியா கப்பல் போக்குவரத்தை அதிகப்படுத்துகிறது. அதாவது இந்தியா இலங்கைத் தீவை சுற்றி வளைக்க முயல்கிறதாகவே தெரிகிறது. சீனாவின் சுற்றி வளைப்பை முறியடித்து இந்தியா வெற்றி கொள்ள திட்டமிடுகிறது. அது தென்னிலங்கையின் ஆட்சியையும் உள்ளடக்கியதாகவே அமையவிருக்கிறதாக உணரப்படுகிறது.

எனவே இலங்கை-இந்திய உறவு பாதிக்கப்படுவது ஈழத்தமிழருக்கு மட்டுமல்ல தென்னிலங்கைக்கும் ஆபத்தானதே. தென்னிலங்கை சீனாவையும் இந்தோ- பசுபிக் தந்திரோபாய நாடுகளையும் முன்னிறுத்திக் கொண்டு இந்தியாவை கையாளலாம் எனக் கருதுகிறது. அதன் விளைவு நீண்டகாலத்திற்கு சாத்தியமாகுமா என்பது முக்கியமானது. இவை யாவற்றையும் எதிர்கொள்ளும் திறன் இந்தியாவுக்கு அதிகரித்திருப்பதாகவே தெரிகிறது. இதனால் இலங்கைத்தீவில் அரசியல் வல்லரசுகளின் சுற்றி வளைப்புகளால் நகர்த்தப்படப் போவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஆனால் இந்தியாவே தனது புவிசார் அரசியல் பிணைப்பினால் தனித்துவமான கட்டமைப்புக்கு கொண்டு வரும் என்ற எதிர்பார்க்கை அதிகரித்துள்ளது.

## யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால்

(3ம் பக்கத் தொடர்ச்சி) அமைக்க பெறப்பட்ட செலவழிக்கப்பட்ட நிதி விபரங்கள் தூபிக்கான அனுமதிகள் தொடர்பிலான ஆவணங்களுடன் வியாழக்கிழமை விசாரணைக்கு சமூகமளிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தூபி கடந்த 2020 ஜனவரி 08ஆம் திகதி இரவு இடித்து அழிக்கப்பட்டது. அதனை அடுத்து பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டதை அடுத்து துணைவேந்தர் சிறிசற்குணராஜா வினால் மீண்டும் 10ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு புதிய தூபி நிர்மாணிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து வருடந்தோறும், மே 18 முள்ளி வாய்க்கால் நினைவேந்தல்கள் குறித்த தூபியிலையே இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய தூபிக்கு உரிய அனுமதிகள் பெறப்படவில்லை என்றும், அவ்வாறு அனுமதி பெறப்படாத தூபியை உடைச்சு அகற்றுமாறும் கோரியே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

## விடுதலைப்புலிகள் இயக்கமும் ஹமாஸ் இயக்கமும்

(17ம் பக்கத் தொடர்ச்சி) விழுமியங்களை மீறிச் செயற்படும். இருந்தாலும் விடுதலை இயக்கங்களில் மாத்திரமே அரசுகள் குறிப்பாக வல்லரசுகள் பிழை பிடிக்கும். விடுதலை இயக்கங்களைப் பிரிக்க அல்லது உள்ளக முரண்பாடுகளை ஏற்படுத்த இந்த வல்லரசுகள் தமக்குச் சாதகமான முறையில் அரச பயங்கரவாதங்களைக் கட்டவிழ்த்தும் விடும்.

2009 இல் குறிப்பாக 2002 சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் விடுதலைப் புலிகள் மீது தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டன. சில தவறுகள் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டுப் புலிகள் மீது பழியும் போடப்பட்டுப் பயங்கரவாத அமைப்பாக ஐரோப்பிய ஒன்றியம் 2006 இல் தடையும் செய்தது. இப்போது பலஸ்தீனியர்களின் நியாயமான நிலைப்பாட்டைப் பயங்கரவாதமாக்கி கமாஸின் செயற்பாடுகளையும் முற்று முழுதாக முடக்க இஸ்ரேல் எடுக்கும் முயற்சிக்கு மேற்குலகம் ஆதரவு வழங்குகிறது.

இந்த ஆதரவின் ஊடாகவே ஈரான் அணுசக்தி முன்னேற்றத்தையும் தடுத்து ஈரான் மீதும் போர் தொடுத்து ஏற்கனவே ஈராக் நாட்டை அழித்தது போன்று ஈரானையும் அழிக்கவுள்ள அமெரிக்கா வியூ கம் வகுக்கிறது போல் தெரிகிறது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ இந்த வியூகம் அரங்கேறலாம்.

## இலங்கை தொடர்பான தமது நிலைப்பாட்டில்....

(8ம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்ப்பிரதிநிதிகள் நினைவுறுத்தினர். அடுத்ததாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியா தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எதிர் வரும் ஆண்டு முடிவுக்கு வரவுள்ள நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என தமிழ்ப்பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர். அதுமாத்திரமன்றி இலங்கை விவகாரம் சர்வதேச மட்டத்தில் ஒரு பேசுபொருளாக இருப்பதற்கும், அழுத்தம் பிரயோகிக்கப்படுவதற்கும் இவ்வாறான தீர்மானங்கள் முக்கிய காரணமாக இருப்பதனால், இதனைக் கைவிடாது தொடர்வது அவசியம் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

அதற்குப் பதிலளித்த பிரித்தானிய அமைச்சர், இவ்விவகாரத்தைப் பொறுத்தமட்டில் ஏனைய இணையனுசரணை நாடுகள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடிய பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்க முடியும் எனத் தெரிவித்தார். இருப்பினும் இலங்கை விவகாரத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என்றும், ஆகவே அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா
## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

இணுவில் திருவுர் ஒன்றியம்-கனடா விடுக்கும் அறிவித்தல்- பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும் நிர்வாக ஆண்டு (2023--2025)

காலம்:-28-10-2023 (சனிக்கிழமை) காலம்:- 4.00 மாலை முதல் 6.00 மாலை வரை

இடம்:- ரொறன்ரோ நகரசபை மண்டபம்

Scarborough Civic centre) Room 1 &2 - 150 Borough Dr- Scarborough

ஊர் அபிமானிகள் மற்றும் ஒன்றிய அங்கத்தவர்கள் அனைவரையும் இப்பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்து நல்லாலோசனைகளிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம்.தொடர்புகளுக்கு சாந்தி சர்வானந்தா 647-200-2177 மு.கிருபாகரன் 416-430-0422 ப.கஜஜெயன் 416-732-5898

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
Super Visa Insurance
RESP, RRSP and TFSA
Arun
KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS




BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com




முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 12வது ஆண்டாக நடாத்தும்
ஊட்டும் கரங்கள்
வெள்ளி விழா கண்ட
அரவிந்தனின் மெகா ரியூனேர்ஸ்
இசையில்
Mega Tunes
பிரபல பின்னணிப் பாடகி
சுர்முகி
பிரபல பின்னணிப் பாடகர்
முகேஷ்
கனேடிய
தமிழ்ப்பாடகர்கள்
இணைந்து
வழங்கும்
இன்னிசை மாலை
OCTOBER
28
2023
SAT @ 6:00PM
ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE
TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)
சிறப்பு உணவு: ரொறன்ரோவின் முன்னணி உணவகமான நந்தா கேற்றறிங் வழங்கும் சிறப்பு உணவு அனைத்து பார்வையாளர்களுக்கும் வழங்கப்படும்
அன்பளிப்பு
$200.00 - $100.00 - $50.00
விழா குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்
தொடர்புகளுக்கு:
ஈழநாடு பரமேஸ் - 416.841.9600
தயவு செய்து நுழைவுச்சீட்டுடன்
மண்டபத்திற்கு வரவும்.
நிகழ்வுகள் சரியாக மாலை 6:00 மணிக்கு
ஆரம்பமாகும்.
தங்கள் ஆதரவுக்கு நன்றிகள்

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய
கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.